Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, OCTOBER 21, 2022

வெள்ளிக்கிழமை 21, ஒக்டோபர் 2022 | ஒளி: 08 கதிர் 126 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# மாவு விலை குறைந்தாலும் பாண் விலை குறையாது



கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டுள்ள போதும் பாண் உட்பட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியாது என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 25 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்தது.

தொடர்ச்சி P2

22ஆம் திருத்தத்தின் ஊடாக

# தீர்வுகளை பெறுவோம்

## ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைப்பு | இரட்டைக் குடியுரிமைக்கும் தடை | இரண்டரை வருடங்களில் சபையை கலைக்கலாம்



பா.நிரோஸ்

புதிய பாராளுமன்ற சம்பிரதாயத்தைக் கொண்டுவருவதற்காகவும், பாராளுமன்ற ஜனநாயகத்தை உறுதி செய்து, மக்களின் நல்வாழ்வுக்காக கொண்டுவரப்படும் 22ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் கேட்டுக்கொண்டார்.

22ஆவது திருத்த சட்ட மூலத்தின் படி நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் சில குறைக்கப்பட்டு, இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றத்துக்கு வருவது தடுக்கப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் சபைக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2

# புனர்வாழ்வு பணியக சட்டமூலம் அரசியல் அமைப்புக்கு முரண்

## 'போராட்டக்காரர்கள்' 'முன்னாள் போராளிகள்' 'வன்முறையாளர்கள்' என்ற சொற்பதங்கள் நீக்கப்பட வேண்டுமாம்.



பா.நிரோஸ்

அரசாங்கம் கொண்டுவந்துள்ள சர்ச்சைக்குரிய புனர்வாழ்வு பணியக சட்டமூலத்தின் சில உள்ளடக்கங்கள் அரசியல் அமைப்புக்கு முரணானது எனவும், இச்சட்டமூலத்தில் உள்ள சில சரத்துக்களை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

மேலும், 'போராட்டக்காரர்கள்', 'முன்னாள் போராளிகள்', 'வன்முறையாளர்கள்' என்கிற சொற்பதங்கள் புனர்வாழ்வு பணியகச் சட்டமூலத்தில் நீக்கப்பட வேண்டுமெனவும், அதற்குப் பதிலாக "போதைப்பொருள் பாவனையாளர்கள் அல்லது போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள்" என்ற சொற்களே பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் தனது வியாக்கியானத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

தொடர்ச்சி P2

# செவ்வாய் இரவு முதல் தனியார் பஸ் ஓடாது

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (25) இரவு முதல் நாடுதழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள அனைத்து தனியார் பஸ் சங்கங்களும் தீர்மானித்துள்ளன. அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பஸ் சங்கம், ஐக்கிய பஸ் உரிமையாளர்கள் சங்கம் ஆகியவையே போராட்டத்தில் குதிக்கவுள்ளன. நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக லீசிங் கட்டணங்களை செலுத்த முடியவில்லை என்றும் லீசிங் தவணைகளை செலுத்தாத பஸ்கள் பறிமுதல் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்துமே வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

லீசிங் தவணைகளை செலுத்தத் தவறியதன் காரணமாக சுமார் 50 பஸ்கள், பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



இலங்கையில் உற்பத்தி செய்யப்படும்

# பச்சைநிற ஆப்பிள் ஜனாதிபதிக்கு

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பச்சை நிற ஆப்பிள் பழத்தின் முதல் அறுவடை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் நேற்று (20) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. எம்.பி. லக்ஷ்மன் குமார எனும் விவசாயியே கல்கமுவ, தம்புத்தேகம பிரதேசத்தில் இரண்டு ஏக்கர் காணியில் இந்த ஆப்பிள் விளைச்சலை மேற்கொண்டுள்ளார்.

மேற்படி விவசாயிடம் பயிர்ச்செய்கை தொடர்பில் தகவல்களைக் கேட்டறிந்த ஜனாதிபதி, ஆப்பிள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதை நேரில் வந்து பார்ப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் கூறினார்.

ஆப்பிள் விதைகளை இந்நாட்டுக்கு எடுத்து வந்து பரிசோதனைக்கு உட்படுத்தியதன் பின்னரே பயிர்ச்செய்கையை முன்னெடுத்ததாகவும் இரண்டு ஏக்கரில் அறுவடை கிடைத்திருப்பதாகவும் விவசாயி லக்ஷ்மன் குமார தெரிவித்தார்.

இந்த விளைச்சலை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதற்கு தேவையான விதைகளை உற்பத்தி செய்து, அவற்றை விநியோகிப்பதற்கு முடியுமென்றும் இலங்கையில் எந்தவொரு இடத்திலும் இதற்கான பயிர்ச்செய்கையை முன்னெடுக்கும் வகையிலேயே இந்த விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 200 இலங்கையர்கள் நாசாவில் உள்ளனர்

பா.நிரோஸ்

இலங்கையைச் சேர்ந்த 200 விஞ்ஞானிகள் நாசாவில் தற்போதும் பணியாற்றி வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவித்தார். கற்றவர்கள் நாட்டை விட்டுச் செல்வதாலேயே கலாநிதி சிறில் பொன்னம்பெரும, பேராசிரியர் சரத் குணபால உள்ளிட்ட 200இக்கும் அதிகமான இலங்கையர்கள் நாசாவில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக கற்றவர்கள் நாட்டை விட்டுச் செல்வது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் எழுப்பிய மேலதிகக் கேள்விக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.



தொடர்ச்சி P2

# இட்டுகம நிதியம் மூடப்பட்டது

அமைச்சரவையின் அனுமதியைத் தொடர்ந்து, தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட இட்டுகம (செய்கடமை) கொவிட்-19 சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் செயல்பாடுகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

85737373 என்ற இலங்கை வங்கி கணக்கு இலக்கத்தில் இயங்கி வந்த குறித்த நிதியமானதும் 18 ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளதாக நிதியத்தின் செயலாளர் டொக்டர் தாரக லியனபத்திரன பொதுமக்களுக்கு அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# 69 நாட்களுக்குள் கால்பந்து சம்மேளன தேர்தல் நடக்கும்

## மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு பணிப்பாளர் உறுதி

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துக்கான தேர்தல், நேற்றைய தினத்திலிருந்து 69 நாட்களுக்குள் நடத்தப்படும் என விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு நேற்று (20) உறுதியளித்தார்.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் மற்றும் செயலாளரினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது.

அதன்போது, விளையாட்டு அதிகாரிகள் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன மேற்குறிப்பிட்ட உறுதிமொழியை வழங்கினார்.

தொடர்ச்சி P2



3 நிபந்தனைகளின் கீழ்

# 22 க்கு ஆதரவளிக்க தயார்

பா.நிரோஸ்



மூன்று முக்கிய நிபந்தனைகளின் கீழ், அரசாங்கம் கொண்டுவந்துள்ள அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபைக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2

நெருக்கடி நீடித்தால்

# தனியார் துறைக்கு பாரிய பாதிப்பு

## பிட்ச் தரப்படுத்தல் நிறுவனம் தெரிவிப்பு




இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்ந்தும் நீடித்தால் அது தனியார் நிறுவனங்களில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என பிட்ச் தரப்படுத்தல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வர்த்தகத்துறையில் ஏற்படும் தாக்கமானது 50 வீதமான தனியார் துறை நிறுவனங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

தேர்தலை காலந்தாழ்த்தினால்

# கடும் நடவடிக்கை

## எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு கூட்டறிக்கை

பா.நிரோஸ்

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறி தேர்தலைக் காலந்தாழ்த்தும் அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து கூட்டறிக்கை ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று (20) எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றாகக் கூடி இது தொடர்பில் விரிவாக ஆராய்ந்தன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், அரசாங்கத்திலிருந்த விலகி சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்து எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

ஆஸியில் புகலிடம் கோரிய

# 183 இலங்கை பிரஜைகள் திருப்பி அனுப்பப்பட்டனர்

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரிய 183 இலங்கை பிரஜைகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று, கடல்சார் எல்லைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

முன்னாள் அமைச்சர்

# அலி சாஹிருக்கு அதிரடி உத்தரவு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் உள்ள தனியார் சர்வதேச பாடசாலை ஒன்றில் கடமையாற்றிவரும் 46 ஆசிரியர்களுக்கு உரிய ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு செலுத்தவேண்டிய 66 இலட்சம் ரூபாவை செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தீர்வுகளை பெறுவோம்

பாராளுமன்றத்தில் நேற்று (20) அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதி அமைச்சு, அரசாங்கத்தின் தேவைகளுக்காக 22ஆவது திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்படவில்லை. அதேபோல் எந்தவொரு கட்சியையும், குழுவையும் பாதுகாக்கும் நோக்கத்தில் இதனை நாம் கொண்டுவரவில்லை. அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடியே 22ஐ கொண்டுவந்துள்ளோம். 1972ஆம், 1978ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புகளில் காணப்பட்ட குறைப்பாடுகளே நாட்டில் பொருளாதார, அரசியல் பிரச்சினைகளுக்கு வழி வகுத்தன. குறிப்பாக சிறுபான்மை இனத்தவர்களின் பாதுகாப்பு தொடர்பில் அதற்கு முன்னர் இருந்த அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் 1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பில் இல்லை என்பதால், வடக்கு, கிழக்கு சிறுபான்மை பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாட்டில் கடந்த மே மாதம் ஏற்பட்ட அராஜாக நிலைமைகளைத் தொடர்ந்து, எனக்கு நீதி அமைச்சை வழங்கி 20ஆவது திருத்தச் சட்டத்தில் விட்ட தவறுகளை திருத்தி மீள 19ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென அப்போதிருந்த ஜனாதிபதியும், பிரதமரும் என்னிடம் கேட்டுக்கொண்டனர். இதன்படி 22ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக பாராளுமன்றத்தில் புதிய சம்பிரதாயங்கள் ஏற்படும். 22ஆவது திருத்தச் சட்டமூலம் எந்தவொரு கட்சியையும் பாதுகாப்பதற்காகக் கொண்டுவரப்படவில்லை என்பதால், இதனை எவராலும் குறைகூற முடியாது எனவும் தெரிவித்தார்.

22ஆவது திருத்தச் சட்டமூலத்தில் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் சில குறைக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி வசமே இருக்கும். அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை. 22இன் படி அரச சேவை, நீதிமன்ற சேவை என்பன சுயாதீனமாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 19ஐ போல அரசியலமைப்பு பேரவை மீள ஸ்தாபிக்கப்படும். அதில் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்ற சிவில் சமூகத்தைச் சேர்ந்த மூவர் உள்வாங்கப்படுவார்கள். அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடனேயே அரச உயர் பதவிகள் வழங்கப்படும். குறிப்பாக நீதியரசர்கள், ஆணைக்குழுக்களின் ஆணையாளர்கள், மத்திய வங்கியின் ஆளுநர், பொலிஸ்மா அதிபர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்டோர் அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடன் நியமிக்கப்படுவார்கள்.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக முடியாது. நாட்டுக்கு சேவை செய்ய விரும்பும் எவருக்கும் வேறொரு நாட்டின் குடியுரிமை அவசியமற்றது. பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் 20ஆவது திருத்தச் சட்டத்தில் இரண்டவரை வருடங்கள் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் மாற்றமில்லை எனவும் தெரிவித்தார்.

# புனர்வாழ்வு பணியக சட்டமூலம் அரசியல் அமைப்புக்கு முரண்

பாராளுமன்றத்தின் நேற்றைய (20) அமர்வை ஆரம்பித்து வைத்து சபாநயாகர் அறிவிப்பை விடுக்கும்போதே இச்சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் மீதான உயர்நீதிமன்ற வியாக்கியானத்தை சபாநாயகர் சபையில் வாசித்தார்.

இச்சட்டமூலத்தின் 25(1) சரத்து அரசியலமைப்பின் 14(எ) சரத்துக்கு ஏற்புடையதாக அமையவில்லை. இதனை நிறைவேற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம்.

மேலும், போதைப்பொருள் பாவனையாளர்கள் அல்லது அடிமையானவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தும்போது அனைத்து நடவடிக்கைகளும் நீதிமன்ற கட்டமைப்பின் பிரகாரம் முன்னெடுக்கப்பட வேண்டும். புனர்வாழ்வு பணியக சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குழு நியமனத்தில் 6 பேர் உள்வாங்கப்பட வேண்டும். துறைசார் நிபுணத்துவம் கொண்ட இருவர், சமூக தொழிற்துறை அனுபவமுடையவர்கள் என்ற அடிப்படையில் குழு உறுப்பினர் நியமனம் காணப்பட வேண்டும் என்பன தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. போதைப்பொருள் பாவனையாளர் அல்லது போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான நபர் அரசாங்க வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதுடன், அது தொடர்பான தகவலை பொறுப்பான அரசாங்க அதிகாரி நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் எனவும் அறிவித்தார்.

# 200 இலங்கையர்கள் நாசாவில் உள்ளனர்

கற்றவர்கள் நாட்டை விட்டுச் செல்வது என்பது இப்போது நடக்குமொன்றல்ல. இது காலா காலமாக நடந்து வருகிறது. கற்றவர்கள் நாட்டை விட்டுச் செல்வதாலேயே கலாநிதி சிறில் பொன்னம்பெரும, பேராசிரியர் சரத் குணபால உள்ளிட்ட 200இக்கும் அதிகமான இலங்கையர்கள் நாசாவில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக கற்றவர்கள் நாட்டை விட்டு செல்வதாக எண்ண முடியாது. இலங்கை போன்ற நாடுகளில் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆய்வுகூட வசதிகள் இல்லை என்பதாலேயே கற்றவர்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் நிலை ஏற்படுகிறது.

கலாநிதி சிறில் பொன்னம்பெரும போன்றோர் நன்றாகக் கல்வி கற்றுவிட்டு இலங்கையிலேயே இருந்திருந்தால் அவர்கள் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகளாகியிருக்க முடியாது. இலங்கை நனோ தொழில்நுட்பம் 2014ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன்னர் நனோ தொழில்நுட்ப தொடர்பான அறிவு யாருக்கும் இல்லை. நாட்டில் மீண்டும் நனோ தொழில்நுட்பத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

# மாவு விலை குறைந்தாலும் பாண் விலை குறையாது

அதற்கமைய, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் கோதுமை மா சந்தையில் 265 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் என்று சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, கோதுமை மாவின் மொத்த விற்பனை விலையை 85 ரூபாயால் சங்கம் குறைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கோதுமை மாவின் விலை 250 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டால் மாத்திரமே பாண் உட்பட பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், நாட்டின் பிரதான கோதுமைமா விநியோகஸ்தர்களான பிறீமா மற்றும் செரண்டிப் ஆகிய இரண்டு நிறுவனங்களும் மாவின் விலையைக் குறைக்க வேண்டும் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# செவ்வாய் இரவு முதல் தனியார் பஸ் ஓடாது

கொரோனா தொற்று பரவிய காலப்பகுதியில் லீசிங் கட்டண தளர்வுகளை அரசாங்கம் செய்த போதும் லீசிங் நிறுவனங்களால் பின்னர் மாதாந்த தவணைக்கு மேலதிகமாக மேலதிக கட்டணங்கள் அறவிடப்பட்டமையையும் அவர் சுட்டிக்காட்டினார். தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாகவும் கியூஆர் முறைமையின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட டீசல் வழங்குவதாலும் பஸ்களை இயக்கமுடியவில்லை என்றும் லீசிங் தவணைகளை செலுத்தத் தவறிய 3,000 பஸ்களை பறிமுதல் செய்ய முயற்சிகள் எடுக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

எனவே, அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை கால அவகாசம் வழங்குமாறு அரசாங்கத்திடமும் லீசிங் நிறுவனங்களிடமும் கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்த அவர், தங்களது தவறால் கட்டணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படவில்லை என்றும் இது குறித்து கலந்துரையாடப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

லீசிங் மற்றும் நிதி நிறுவனங்கள், அரசாங்கம் உட்பட பொறுப்பு வாய்ந்த தரப்பினர் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் பஸ்களை பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளை கைவிடவேண்டும் என்றும் தெரிவித்தார்.

# இட்டுகம நிதியம் மூடப்பட்டது

நாட்டில் கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடவும் தடுப்பூசி செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும், நிதியத்துக்கு பங்களித்த நன்கொடையாளர்களுக்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்த அவர், காசோலைகள் மற்றும் பணத்தை நிதியத்துக்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறும் அறிவித்தார்.

220 கோடியே 71 இலட்சத்து 64 ஆயிரத்து 785 ரூபாய் 58 சதத்தை நிதியம் நன்கொடையாக பெற்றதுடன், 199 கோடியே 75 இலட்சத்து 69 ஆயிரத்து 456 ரூபாய் 56 சதம் செலவிடப்பட்டுள்ளது.

பிசிஆர் பரிசோதனைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள், தடுப்பூசித் திட்டங்கள், அவசர சிகிச்சை பிரிவுகளுக்கான கட்டில்கள் மற்றும் மருந்து கொள்வனவுக்கு மேற்குறிப்பிட்ட பணம் செலவிடப்பட்டுள்ளது.

மேலும், ஒக்டோபர் 18ஆம் திகதியன்று குறித்த நிதியில் 21 கோடியே 8 இலட்சத்து 77 ஆயிரத்து 431 ரூபாய் 05 சதம் மீதி காணப்படுவதுடன், சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ உதவிக்கான ஜனாதிபதி நிதியத்தில் அந்தப் பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 22 க்கு ஆதரவளிக்க தயார்

எவ்வாறாயினும் குழுநிலை விவாதத்தின்போது அரசாங்கம் தந்திரங்களை மேற்கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 22இல் திருத்தங்களை மேற்கொள்ளக்கூடாது. அவ்வாறு செய்தால் ஆதரவளிக்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (20) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அரசாங்கம் கொண்டுவந்துள்ள 22ஆவது திருத்தச் சட்டமூலத்தில் 20ஆவது திருத்தச்சட்டத்தை விட சில நல்ல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 22ஆவது திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுவதை உலக நாடுகள் உன்னிப்பாக பார்த்துகொண்டுள்ளன. எனவே 22ஆவது திருத்தச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல இரண்டரை வருடங்களின்

பின்னர் பாராளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியும், இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றத்துக்கு வர முடியாது போன்ற விடயங்கள் எந்தவிதமான திருத்தங்களையும் மேற்கொள்ளாது சமர்ப்பிக்க வேண்டும்.

அரசியலமைப்பு பேரவைக்கு பிரதமர், எதிர்க்கட்சி தலைவரின் இணக்கப்பாட்டுடன் சிவில் உறுப்பினர்களை நியமிக்க வேண்டுமென நீதி அமைச்சரிடம் நாம் யோசனை ஒன்றை முன்வைத்திருந்தோம். அதனையும் 22இல் உள்ளடக்குவதாக அவர் இணங்கியிருந்தார். எனவே மேற்குறித்த நிபந்தனைகளை குழு நிலை விவாதத்தின்போது திருத்துவதற்கு அரசாங்கம் தந்திரமாகச் செயற்படாது அப்படியே அவற்றை சமர்ப்பிக்குமாக இருந்தால் 22ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு நாம் ஆதரவளிக்கத் தயார். எனினும் எமது முழு இலக்கு நாங்கள் சமர்ப்பித்த 21ஆவது திருத்தச் சட்டமூலம் என்றாலும், நாட்டை மேலும் வங்குரோத்தடைய அனுமதிக்கக்கூடாது என்பதால் முழு மனதோடு அல்லாது 22 இக்கு ஆதரவளிப்போம் எனவும் தெரிவித்தார்.

# 69 நாள்களுக்குள் கால்பந்து சம்மேளன தேர்தல் நடக்கும்

அத்துடன், தேர்தல்கள் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஆராய 14 நாள்களுக்குள் தேர்தல் குழுவொன்றை அமைச்சர் நியமிப்பார் என்றும் மேலதிக சொலிசிட்டர் நீதிமன்றில் அறிவித்தார். 2022 செப்டெம்பர் 22 ஆம் திகதியிட்ட விளையாட்டு அமைச்சரால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் சட்டபூர்வ தன்மையை எதிர்த்து ஜஸ்வர் உமர் லெப்பை, உபாலி ஹேவகே ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்தனர்.

# கடும் நடவடிக்கை

உள்ளூராட்சிமன்ற தேர்தலைக் காலந்தாழ்த்துவது தொடர்பில் கடந்த 12ஆம் திகதியும் எதிர்க்கட்சிள் கூடி கலந்துரையாடியிருந்தன. இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த எதிர்க்கட்சியினருக்கு ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இந்த கூட்டறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்தப்போவதாகக் கூறி உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை காலந்தாழ்த்தினால் தனிக் கட்சியாகவும், ஒன்றிணைந்தும் அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இக்கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் கலந்துகொள்ளவில்லை என்றாலும், கூட்டறிக்கையில் கையெழுத்திடுவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தொலைபேசி ஊடாக அறிவித்துள்ளாக இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இதன்போது ஏனைய எம்.பிகளுக்கு அறிவித்தார்.

# தனியார் துறைக்கு பாரிய பாதிப்பு

மிகவும் நெருக்கடியான பொருளாதார தன்மைகளால் அதிக செயற்பாட்டு இடையூறுகள் மற்றும் பணப்புழக்க நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும். மூலப்பொருட்கள் மற்றும் முடிவுப்பொருட்களின் இறக்குமதியை பாதிக்கும் எனவும், வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு, உயர் பணவீக்கம் மற்றும் அதிக வட்டி விகிதங்களுடன், மதிப்பிடப்பட்ட உள்ளூர் தனியார் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் முக்கிய ஆபத்துகளாகும் எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

**“ நுகர்வோர் பொருட்கள், மின்னுற்பத்தி நிலையங்கள், கட்டட நிர்மாணங்கள் பாரிய பாதிப்பை சந்திக்கும். இந்த நிலை 12 முதல் 18 மாதங்கள் வரை நீடிக்கும்**

அத்துடன், நுகர்வோர் பொருட்கள், மின்னுற்பத்தி நிலையங்கள் மற்றும் கட்டட நிர்மாணங்கள் பாரிய பாதிப்பை சந்திக்கும் எனவும், நீண்ட கால நெருக்கடியால் பாதிக்கப்படும் இந்த நிலை 12 முதல் 18 மாதங்கள் வரை நீடிக்கும் எனவும் பிட்ச் தெரிவித்துள்ளது.

# 183 இலங்கை பிரஜைகள் திருப்பி அனுப்பப்பட்டனர்

இந்தியாவின் புது டெல்லியில் நடைபெற்ற ஆசிய கடலோர காவல்படை நிறுவனங்களின் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்ற போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்துள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை அகதிகள், ஆறு முறைகேடான கடல்வழிகள் ஊடாக அவுஸ்திரேலியாவை அடைய முயற்சிப்பதாகத் தெரிவித்த ரியர் அட்மிரல், இலங்கையர்கள் கடலுக்குச் செல்ல முடியாத மீன்பிடிப் படகுகளில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயல்வதாக சுட்டிக்காட்டினார்.

இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவை அடைய சுமார் 21 நாள்கள் எடுக்கும் என்று தெரிவித்த அவர், கடல்மார்க்கமாக அவுஸ்திரேலியாவை அடைய முற்படும் படகுகளை தடுத்து நிறுத்துவோம் என்றும் குறிப்பிட்டார்.

**“ இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவை அடைய 21 நாள்கள் எடுக்கும். கடல்மார்க்கமாக அவுஸ்திரேலியாவை அடைய முற்படும் படகுகளை தடுத்து நிறுத்துவோம்**

படகுகளில் வருவோரை அவர்கள் புறப்பட்ட இடம் அல்லது தாய் நாட்டு பாதுகாப்பாக திருப்பி அனுப்பவும் அல்லது தேவைப்பட்டால், அவர்களை ஒரு பிராந்திய செயலாக்க நாட்டுக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# அலி சாஹிருக்கு அதிரடி உத்தரவு

அந்தப் பாடசாலையின் உரிமையாளரான முன்னாள் அமைச்சர் அலி சாஹிர் மௌலானா உட்பட பாடசாலையின் நிர்வாகத்தைச் சேர்ந்த 4 பேருக்குமே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உரிய நிதியங்களுக்கான நிதியை செலுத்தத்தவறினால் 6 மாதத்துக்கு சிறை தண்டனை விதித்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவானும் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் அன்னவர் சதாத் உத்தரவிட்டார்.

சர்வதேச பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 வரையில் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 66 இலட்சத்து 54 ஆயிரத்து 779 ரூபாய் 40 சதம் செலுத்தவேண்டும்.

பாடசாலையின் உரிமையாளரான முன்னாள் அமைச்சர் அலி சாஹிர் மௌலானா மற்றும் பாடசாலை நிர்வாகத்தைச் சேர்ந்த அவரது மனைவி மற்றும் உறவினர் உட்பட 4 பேருக்கு எதிராக மட்டக்களப்பு தொழில் திணைக்களம் , மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்குதல் செய்தனர்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# “எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது”



பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைக்காக, தனக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்த ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே, இதனூடாக தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய அவர், “நாட்டின் வரி வருமானத்தை எவ்வாறு அதிகரிக்க வேண்டுமென பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைக்காக, இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் எனக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு செய்துள்ளார். இவ்வாறான நிலை தொடருமாக இருந்தால் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பேச முடியாத நிலையே ஏற்படும். இதனூடாக எனது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது” என்று சபாநாயகரிடம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எம்.பிகளின் வாயை அடைப்பதற்காகவே எனக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவொரு மோசமான நிலை. எனது பாராளுமன்ற உரையில் நான் எந்த நிறுவனத்தின் பெயரையும், நபரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. ஆனால், அதனை என்னால் செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

இப்பிரச்சினையை பாராளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

# சுதந்திரக் கட்சி 22க்கும் ஆதரவு

19ஆவது திருத்தச் சட்டம், 20ஆவது திருத்தச் சட்டம் என்பவற்றுக்கு ஆதரவாக வாக்களித்திருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, 22ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது. 22ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றி அக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

19ஆது திருத்தச் சட்டத்தை எனது ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்திருந்தோம். இதனை நீக்கி 20ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது, அதற்கு ஆதரவாக நான் வாக்களிக்கவில்லை. என்னை எப்படியாவது வாக்களிக்க வைக்க வேண்டுமென்கிற நோக்கத்தில் அரசாங்கத்தில் தற்போது இணைந்துள்ள சுதந்திரக் கட்சி எம்.பிகள் 6, 7 பேர் எனது வீட்டுக்கு வந்தார்கள். வாகனத்திலாவது ஏற்றிக்கொண்டு வந்துவிடுவோம் என்பது போல அவர்கள் எனது வீட்டுக்கு வந்தார்கள். எனினும் நான் 20க்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவும் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரப் போவதாகக் கூறியிருந்தார். எனவே தொடர்ந்து அரசியலமைப்பில் மாற்றங்களை செய்து கொண்டிருக்காது நாட்டுக்குப் பொருத்தமான அரசியலமைப்பு ஒன்று தேவை எனவும் தெரிவித்தார்.

# திலினியுடன் எந்த கொடுக்கல் வாங்கல்களும் இல்லை

நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பெண்ணுடன் தானோ, தனது குடும்பத்தை சேர்ந்தவர்களோ எவ்வித கொடுக்கல் வாங்கல்களிலும் தொடர்புபடவில்லை என்று முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (19) விசேட கருத்தொன்றை வெளியிட்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

சமிந்த விஜேசிறி எம்.பி, எனது பெயரை குறிப்பிட்டு சபையில் நான் இல்லாத நேரத்தில் கருத்து வெளியிட்டிருந்தார். கொழும்பில் நிதி சேகரித்ததாக கூறப்படும் பெண்ணை விடுவிப்பதற்காக நான் கதைத்தாக கூறியுள்ளார். அவ்வாறு கூறுவது தவறாகும். எனக்கு இதில் தொடர்பில்லை. இதனால் இந்த விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்ய வேண்டியதில்லை. அவருடனான கொடுக்கல் வாங்கல்களில் நானோ, எனது குடும்பத்தில் எவரும் தொடர்புபடவில்லை என்றார்.

## மக்களை ஏமாற்றுவதன் ஊடாக

# மக்கள் போராட்டம் வெடிக்கும்



மக்கள் மாற்றங்களை கோரி நிற்கையில், மறுசீரமைப்பு என்ற பெயரில் 22ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வந்து, மக்களை ஏமாற்றுவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (20) நடைபெற்ற அரசியலமைபின் 22 ஆவது திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

22 ஆவது திருத்தச் சட்டமூலம் முக்கியமான மறுசீரமைப்பாக கருதப்படுகின்றது. ஆனால் உண்மையில் அவ்வாறு இல்லை. இந்தத் திருத்தம் ஊடாக, என்ன நடக்கப் போகின்றது. இந்தப் பாராளுமன்றத்தில், அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்திற்கு வாக்களித்தவர்களே 18 ஆவது திருத்தத்திற்கும் வாக்களித்தனர். அதேபோன்று, அவர்கள் 19 ஆவது திருத்தத்திற்கும் வாக்களித்ததுடன், பின்னர் 20 ஆவது திருத்தத்திற்கு வாக்களித்துவிட்டு, இப்போது 22 ஆவது திருத்தத்திற்கு வாக்களிக்கவும் தயாராகின்றனர்.

17, 18, 19, 22 ஆகிய திருத்தங்களின் போது ஒவ்வொரு நேரமும் தவறு செய்துள்ளதாகவும் அதனை மாற்றுவதற்காகவே திருத்தங்களை மேற்கொள்வதாகவும் கூறினீர்கள். இது என்ன விதமான பாராளுமன்றம்?

இங்குள்ள ஒவ்வொருவரும் இதனை தூக்கி வீசுங்கள் என்றே கூறுகின்றீர்கள். எங்களை ஏமாற்றுகின்றீர்கள் என்றும், நீங்கள் வேடிக்கையாளர்கள் என்றும் கூறுகின்றனர். மக்கள் மாற்றமொன்றையே கோருகின்றனர். ஆனால், இந்தச் சபையில் இருக்கும் திருத்தம் நிறைவேற்றப்பட்டால், இதுவொரு மோசடியாகவே அமையும். முழுமையான மாற்றமாக இருக்காது. மக்கள் நிறைவேற்று ஜனாதிபதி முறை தேவையில்லை என்றே கூறுகின்றனர்.

ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தல்களின் போதும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாகவே கூறியிருந்தனர். அவ்வாறுதான் முன்னர் ஒவ்வொரு திருத்தங்களும் வழங்கப்பட்டன. மாற்றத்தை கோரிய மக்கள் நிறைவேற்றுத்துறையை இல்லாது செய்ய வேண்டும் என்று கோருகின்றனர். 21 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் 19 ஆவது திருத்தத்தையாவது கவனத்தில் கொள்ள வேண்டும். 20 ஆவது திருத்தம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை வரவேற்பது போன்றே இருந்தது.

இந்நிலையில் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்போம் என்று கூறுவது ஏமாற்று வேலையாகும். மக்கள் மாற்றங்களை விரும்பும் போது, மறுசீரமைப்பு செய்வது போன்று பாசாங்கு செயற்பாடுகளில் ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். பாராளுமன்றம் எங்களை தவறாக வழிநடத்தியுள்ளது என்று மக்கள் கூறும் நிலை ஏற்பட்டுள்ளது. மக்களை ஏமாற்றுவதன் ஊடாக மக்கள் போராட்டம் வெடிக்கும். இந்த முயற்சியை நாங்கள் எதிர்க்கின்றோம் எனறார்.



# எமக்குள் பிளவுகள் இல்லை

22ஆவது திருத்தச் சட்டமூலம், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படுமென தெரிவிக்கும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இதற்கு எதிராக ஆளுந்தரப்பில் சிலர் வாக்களித்தாலும் எங்களுக்குள் பிளவுகள் இல்லை எனவும் தெரிவித்தார்.

வட மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் மீது, கூட்டமைப்பு எம்.பி சுமந்திரனுக்கு இருந்த கோபத்தால், நல்லாட்சி அரசாங்கத்துடன் இணைந்து மாகாண சபைத் தேர்தலைக் காலந்தாழ்த்தினார். இதனாலேயே கடந்த பொதுத் தேர்தலில், கூட்டமைப்பு எம்.பிகளின் எண்ணிக்கைக் குறைந்தது.

19ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது, வெறும் 16 எம்.பிகளைக் கொண்ட கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி வழங்கப்பட்டது. எனினும் எங்களிடம் அப்போது 54 எம்.பிகள் இருந்தனர். ஆனால் எதிர்க்கட்சியாக எங்களைக் கண்டுகொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

19ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக 20ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்படும்போது, அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தாலும் கடந்த இரண்டு வருடங்களில் நாட்டில் ஏற்பட்ட மாற்றங்களால், 22இல் உள்ள நல்ல விடயங்களைக் கருத்திற்கொண்டு அதை நிறைவேற்றுவோம் எனவும் தெரிவித்தார்.

## முதலீட்டு சபையுடனான

# ஒப்பந்தத்தை புதுப்பிக்க வேண்டும்



இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீள புதுப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கும் அமைச்சர் ரமேஷ் பதிரண, இந்த ஒப்பந்தத்தில் உள்ள சில சிக்கல்கள் காரணமாக முதலீட்டுச் சபைக்கு அதிகளவான அதிகாரங்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அநாவசியமான முறையில் இறப்பர் பாலை இறக்குமதி செய்ய வேண்டாமெனவும், இறக்குமதி செய்யப்படும் இறப்பர் பாலின் அளவும் வரையறுக்க வேண்டுமெனவும் முதலீட்டுச் சபைக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இறப்பரின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், இறப்பர் பாலினை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இறப்பர் பாலை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளமை தொடர்பில் எதிர்க்கட்சியின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எங்களது அரசாங்கத்தின் காலத்தில், கடந்த இரு வருடங்களில் இறப்பர் பாலின் விலை 700 ரூபாய் வரையில் அதிகரித்துள்ளது. எனினும் கொரோனா வைரஸ் காலத்தில் ஏற்பட்ட இறப்பர் உற்பத்திப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக, அதிகளவான கேள்விகள் எழுந்துள்ளபோதிலும், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் இறப்பர் உற்பத்திப் பொருட்களுக்கான கேள்விகள் குறைவடைந்துள்ளன.

இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை, மீளப்புதுப்பிக்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் உள்ள சில சிக்கல்கள் காரணமாக முதலீட்டுச் சபைக்கு அதிகளவான அதிகாரங்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.



# சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும்

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும். ஆனால் அது தொடர்பில் மக்களே தீர்மானிக்க வேண்டுமென்பதால், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்துக்கு வரக்கூடாது என்பதில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுதியாக இருக்கிறது. 22ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டாலும் நாட்டுக்குப் புதிய அரசியலமைப்பு தேவை. அதுபோல புதிய தேர்தல் முறை ஒன்றும் தேவை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும். ஆனால் அதனை ஒரே தடவையில் செய்ய முடியாது. நிறைவேற்று அதிகாரம் நாட்டுக்கு தேவையா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். எனவே அது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

எவ்வாறாயினும் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவே கொண்டுவந்தார். இரட்டைக் குடியுரிமைக் கொண்டவர்கள் பாராளுமன்றத்துக்கு வருவது தடுக்கப்படுமென கோட்டாபய ராஜபக்‌ஷ வாக்குறுதி வழங்கியிருந்தார் எனவும் தெரிவித்தார்.

# ரஞ்சனுக்கு முழு விடுதலை வேண்டும்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டுமென தெரிவிக்கும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அச்சட்டத்தின் கீழ் போலியாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறிதம்ம தேரர், வசந்த முதலிகே உள்ளிட்டவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார். வசந்த முதலிகே உள்ளிட்டவர்களை போலியாக அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளது. எனவே அவர்களின் தடுப்புக் காவல் உத்தரவுகளில் தளர்வுகளை ஏற்படுத்தி, அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இதேவேளை, ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. தேர்தலில் போட்டியிடுவது, கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் ஆகியன ரஞ்சனுக்கு மறுக்கப்பட்டுள்ளது. இதனால் ரஞ்சனுக்கு அரைவாசி விடுதலையே கிடைத்துள்ளது என்றார்.

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் பழைய பெயர்:** த லைஃப்பெக் (பிரைவட்) லிமிட்டட்
**கம்பனியின் இலக்கம்:** பீ - வி 00245736
**கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி:** இல. 77, நுன்கமுகொட வீதி, களணி.
**கம்பனியின் புதிய பெயர்:** பிரின்ட்கெயார் எக்கோ (பிரைவட்) லிமிட்டட்
**பதிவுசெய்யப்பட்ட திகதி:** 26 ஏப்ரல் மாதம் 2022

**கம்பனி செயலாளர்கள்**
**கோபரேட் எட்வைசரி சேர்விசஸ் (பீவீட) எல்டீடி**

# மனஅழுத்தங்களால் மாணவர்கள் தவறான பாதைக்குச் செல்கிறார்கள்

## மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம்

■ க. விஜயரெத்தினம்

கற்றல் செயற்பாடுகளிலிருந்து பெரும்பாலான மாணவர்கள் விலகி, போதைவஸ்து பாவனையிலும் தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபடுவதை இன்றைய காலகட்டத்தில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண மட்ட அழகியல் தின போட்டியின் ஆரம்ப நிகழ்வு, மட்டக்களப்பு மகாஜன கல்லூரியின் மண்டபத்தில் நேற்று (20) நடைபெற்றபோது, பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்படி கூறினார்.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அழகியல் பாடங்களுக்கான உதவி கல்விப் பணிப்பாளர் எஸ். ஸ்ரீதரனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாத்தா குலேந்திரகுமார், மாகாண பிரதி கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஆர். நிர்மலரஞ்சன், மகாஜன கல்லூரியின் அதிபர் எஸ். அருமைராஜா என பெருமளவிலானோர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், போட்டிகளில் பங்கேற்றிருந்தனர்.

பிரதம அதிதி திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தனது உரையில் மேலும் கூறியதாவது: பெரும்பாலான மாணவர்கள், மன அழுத்தங்களுடனேயே கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். இந்த மன அழுத்தங்கள் அவர்களின் நடத்தைகளில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தூண்டுகோலாக அமைகின்றது. மாணவர்களை இந்த அழகியல் ரீதியான செயற்பாட்டுகளில் ஈடுபடுத்தும்போது அவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளில் மிகவும் சந்தோசமாக ஏற்று, கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்லக்கூடியதாக இருக்கின்றது. அதேபோன்று, பெரும்பாலான மாணவர்கள், கற்றல் செயற்பாடுகளிலிருந்து விலகி, போதைவஸ்து பாவனையிலும் தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபடுகிறார்கள். எனவேதான் இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்களை பங்குபற்றசெய்வதன் ஊடாக, மாணவர்களைப் பிரச்சினைகளிலிருந்து விடுவிக்ககூடியதாக அமையும்.





## அழகியல் தினம்

மட்டக்களப்பு மகாஜன கல்லூரியில் நேற்று (20) நடைபெற்ற கிழக்கு மாகாணத்தின் மாகாண மட்ட அழகியல் தின போட்டியின் பிரதான ஆரம்ப நிகழ்வின் போது...

க. விஜயரெத்தினம்

# காரைதீவு - 12இல் டெங்கு பரவல் தீவிரம்



■ காரைதீவு சகா

காரைதீவு - 12 ஆம் பிரிவில் அண்மைக்காலமாக டெங்கு நோய் மிகவும் தீவிரமாக பரவிவருவதன் காரணமாக, காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லீமா வசீர் தலைமையில் விசேட டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சுகாதார பணியாளர்கள் வீடுகளில் டெங்கு பரிசோதனை மேற்கொண்டபோது, அதிகமான இடங்களில் நுளம்பு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கு, பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் அறிவிக்கப்பட்டது.

இரண்டு நாள்களுக்கு மேல் குடம், வாளி, நீல நிற பரல்களில் நீரை சேமித்து வைக்க வேண்டாம் என்றும் கிணறு நுளம்பு வலை இடுமாறும், நீர் சேமிக்கும் கொள்கலன்கள், மலசலகூட வாளி, சுற்றுப் புறங்களில் நீர் தேங்கும் இடங்கள், குளிர்சாதனப் பெட்டியின் பின்பக்க நீர் தேங்கும் பகுதி, சமயலறை 'சிங்'கின் கீழ்பக்க பகுதி, நீர் தேங்கி நிற்கும் பூச்சாடிகள் என்பவற்றை ஒவ்வொரு நாளும் அவதானிக்குமாறும் கூறப்பட்டது.

# கௌரவிப்பு விழா



■ எப். முபாரக்

திருகோணமலை, கருமலையூற்று முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று, வரலாற்றுச் சாதனை புரிந்த மாணவியையும் குறித்த பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் சிறந்த அடைவு மட்டத்தை வெளிப்படுத்திய மாணவர்களையும் ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (19) பாடசாலை அதிபர் கே.எம்.எம் நவாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக, திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது, வெற்றிச் சான்றிதழ்களும் பதக்கங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகள் பெற்று, வரலாற்றுச் சாதனை படைத்த என். அதா சரீஹ் என்ற மாணவிக்கு, கருமலையூற்று ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபையின் முன்னாள் தலைவர் எம். எஸ்.எம் ஆசாத், நன்கொடையாக சைக்கிளை வழங்கிவைத்தார்.

### கரும்புள்ளியான் குடிநீர் விநியோகத்திட்டம்:

# தென்பகுதிக்கு மாற்றப்பட்டதா?

■ மு. தமிழ்ச்செல்வன்



முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேசத்தில் கரும்புள்ளியான் குடிநீர் விநியோகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி, தென்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது என மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் மகாலிங்கம் தயானந்தன் தெரிவித்துள்ளார்.

கரும்புள்ளியான் குடிநீர் விநியோகத்திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு, பொதுமக்களால் அவரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்குக் கருத்துத் தெரிவித்தபோது, அவர் இவ்வாறு தெரிவித்தார். தவிசாளர் மேலும் கூறுகையில் குறிப்பிட்டதாவது:

குடிநீர் திட்டத்தை விரைந்து ஆரம்பிக்குமாறு, என்னிடம் எழுத்து மூலமான கோரிக்கையை பொதுமக்கள் முன்வைத்தனர். இந்தப் பிரதேசங்களில் இரண்டு சதவீதமானவர்களுக்கு சிறுநீரக பாதிப்பு பிரச்சினை உண்டு; காரணம் நீர். எனவேதான், அனைவரினதும் முயற்சியின் பயனாக, கரும்புள்ளியான் குடிநீர் விநியோகத் திட்டம் ஆரம்பிப்பதற்கு 12.01.2022 ஆம் திகதி பத்திரிகையில் கேள்வி கோரல் விளம்பரம் செய்யப்பட்டது. இதற்காக 1,000 மில்லியன் ரூபாய் நிதியை உலக வங்கி ஒதுக்கீடு செய்ததாக அறிகின்றோம்.

ஆனால், இன்றுவரை இத்திட்டத்துக்காக எவ்வித பணிகளும் ஆரம்பிக்கப்படவில்லை. இந்தப் பிரதேச மக்கள் வறட்சிக் காலங்களில் குடிநீரை பெற்றுக்கொள்ள முடியாத அளவில், கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கையும் வருடந்தோறும் அதிகரித்துச் செல்கிறது.

எனவேதான், உலக வங்கியின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர், நிலைமைகளை ஆராய்ந்து, இத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டனர். ஆனால், அந்த நிதிக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. இவ்விடயம் தொடர்பில் எமக்கு பலத்த சந்தேகம் உண்டு. குறித்த நிதியானது, கொழும்பு மட்ட உயரதிகாரிகளால், தென்இலங்கைக்கு மாற்றப்பட்டுவிட்டதாக அறிகின்றோம்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் அதிக கவனம் செலத்தி, நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர், பொறுப்பான அமைச்சர், வடக்கு ஆளுநர் உள்ளிட்ட பலருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளோம் என மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் மா. தயானந்தன் தெரிவித்தார்.

# மந்திரி மனை புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



■ எம். றொசாந்த்

தமிழர் மரவுரிமைச் சின்னங்களை, அவற்றின் தனித்துவம் மாறாமல் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கு கையளிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண மரவுரிமை மையமானது, வரலாற்றுத் தொன்மை மிக்க நல்லூர் இராஜதானி காலத்தை நினைவுபடுத்தும் மந்திரிமனையைப் புனரமைக்கும் பணி நேற்று முன்தினம் (19) ஆரம்பிக்கப்பட்டது.

தொல்பொருள் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியுடனும் அனுமதியுடனும், நன்கொடையாளர்கள் மூலம் யாழ்ப்பாண மரவுரிமை மையத்துக்குக் கிடைத்த நிதியில், இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், மந்திரிமனையுடன் சேர்ந்து வளர்ந்துள்ள மரங்கள் வெட்டப்பட்டு, மருந்து ஏற்றும் செயற்பாடு நடைபெறுகின்றது.

### பொது இடங்களில் குப்பை வீசுபவர்கள் தொடர்பில்

# ஆதாரம் தருவோருக்கு சன்மானம்

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வீதிகள், பொது இடங்களில் குப்பைகளை வீசுகின்றவர்களை புகைப்படம் மற்றும் காணொளி பதிவு ஆதாரத்துடன் மாநகர சபைக்கு அறிவிப்பவர்களுக்கு, குற்றமிழைப்பவர்களிடம் இருந்து அறவிடப்படும் குற்றப்பணத்தில் 10 சதவீதம் ஆதாரம் தருபவர்களுக்கு சன்மானமாக வழங்குவதென யாழ். மாநகர சபை தீர்மானித்துள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட குடியிருப்பாளர்களின் வீடுகளுக்கு முன்னுள்ள வீதியோரத்தை அவர்கள் தூய்மையாகப் பேண வேண்டும். வீதியோரங்கள் பற்றையாக உள்ளமையால், அதற்குள் குப்பைகளை வீசி விட்டுச் செல்கின்றார்கள். அதற்கு அந்த வீதியில் உள்ள மக்களே பொறுப்பு கூற வேண்டும். அவ்வாறு தூய்மை பேணாவிடின் அவர்களிடமிருந்து குற்றப்பணம் அறவிடப்படும் எனவும் மாநகர மேயர் வி. மணிவண்ணனால் முன்வைக்கப்பட்ட தீர்மானம் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# 9,971 குடும்பங்களுக்கு உணவுப் பற்றாக்குறை



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் 9,971 குடும்பங்கள் உணவு பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சிமாவட்ட செயலாளர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிராமிய பொருளாதார புத்தெழுச்சி மையங்களை வலுவூட்டும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (19) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கூறுகையில், பிரதேச செயலக ரீதியாக பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 9,971 குடும்பங்கள் உணவு பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளன. அதேநேரம் 576 வரையான ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள், ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். வறுமையால் பாதிக்கப்பட்ட 784 கர்ப்பிணித் தாய்மார்களும் இருக்கிறார்கள்.

இந்தப் புள்ளிவிவரத் தகவல்களில் இருந்து, மக்களை பாதுகாக்க அனைவருக்கும் உணவு வழங்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், அனைத்து துறையினரும் இணைந்து செயல்பட வேண்டும். குறிப்பாக வீட்டுத் தோட்டங்களை உருவாக்குதல், உணவு உற்பத்திகளை ஊக்கப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு சகல துறையினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

### பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் நினைவுதினம்

■ நிதர்சன் வினோத்

2016 ஆம் ஆண்டு, பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நடராசா கஜன், பவுண்ராஜ் சுலக்சன் ஆகியோரின் நினைவுதினம் நேற்று (20) யாழ். பல்கலைக்கழன மாணவர்களால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் பொழுது, யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான தூபியில் கஜன், சுலக்சன் ஆகியோரை நிறைவுகூரும் படத்துக்கு மாணவர்களால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதோடு, மலரஞ்சலி செலுத்தி அகவணக்கமும் செலுத்தப்பட்டது. கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சி. ஜெல்சினால் நினைவுரையாற்றப்பட்டது.



# உலருணவுப் பொருட்கள்...

தலவாக்கலை பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு, தலவாக்கலை ஸ்ரீசத்ய சாயி நிலையத்தினூடாக தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு உலருணவு பொருட்கள் வழங்கப்பட்டன. (பி. கேதீஸ்)









# இஸ்லாமிய தின நிகழ்வு

மத்திய மாகாண க /வத், ஹெலுகங்கை முஸ்லிம் வித்தியாலய இஸ்லாமிய தின விழா, நேற்று (20) பாடசாலை பிரதான மண்டபத்தில், அதிபர் ஜனாப் எஸ்.ஏ இத்ரிஸ் தலைமையில் நடைபெற்றது. (மெய்யன்)









15 ஆயிரம் ரூபாய் முற்பணத்தை

# பிரிக்காதீர்

## அக்கரப்பத்தனை தோட்டங்களில் கவனயீர்ப்பு

**துவாரக்ஷன்**

தொழிலாளர்களுக்கு இம்முறை வழங்க வேண்டிய 15,000 ரூபாய் தீபாவளி முற்பணத்தை, தோட்ட நிர்வாகம் 5,000 ரூபாய் 10,000 ரூபாய் அடிப்படையில் வழங்க முன்வந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பெனிக்கு உட்பட்ட வெவர்லி, மோனிங்டன் போட்மோர், ஆட்லி ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், தொழிற்சாலைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் இரண்டு மணி நேரம் இடம்பெற்றதோடு அதன்பின்னர், தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லாமல் வீடுகளுக்குத் திரும்பினர்.

தாம் முறையாக வேலை செய்ததாகவும் தற்போது வழங்கப்படும் முற்பணம் மாத சம்பளத்தில் அறவிடப்படும் நிலையில், தோட்ட நிர்வாகம் 15,000 ரூபாய் முற்பணத்தை ஒரே தடவையில் வழங்க மறுப்பதாகவும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் 15 ஆயிரம் ரூபாய் கிடைத்தால் ஏதோ ஒரு வகையில் தீபாவளி பண்டிகையை சந்தோசமாக கொண்டாட முடியும் என்ற நம்பிக்கையுடன் இருந்த போதிலும், இது ஏமாற்றத்தை தந்துள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏனைய கம்பெனிகள் 15 ஆயிரம் ரூபாயை வழங்கியுள்ள போதிலும் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பெனி மாத்திரமே இதனை வழங்க முடியாது எனக் கூறுவதாகவும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

**ஸாஹோமட் ஆஸிக்**

கண்டி, பூஜாபிட்டிய பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியில் பன்றிகளை வேட்டையாடுவதற்காக சட்ட விரோதமான முறையில் வைக்கப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்கி, 52 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (19) இரவு வெளியே சென்றவர், வீடு திரும்பாத நிலையில், வீட்டுக்கு அண்மித்த



பகுதியிலிருந்து சடலமாக நேற்று (20) மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக, பூஜாபிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார் சைக்கிள் திருடர்களுக்கு வலை

**ரஞ்சித் ராஜபக்ஷ**



திருடிய மோட்டார் சைக்கிளுடன், தலைக்கவசம் அணியாமல் நாவலப்பிட்டியிலிருந்து கம்பளை பகுதி நோக்கி, இருவரால் செலுத்தி செல்லப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நாவலப்பிட்டி நகர மத்தியில் உள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றுக்கு பின்புறம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், அடையாளம் தெரியாத இருவரால் நேற்று முன்தினம் (19) திருடிச் செல்லப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு வருகை தந்த சந்தேகநபர்கள் இருவர், மோட்டார் சைக்கிளைத் திருடி தலைக்கவசம் இல்லாமல் கம்பளை பகுதியை நோக்கி, சென்றுள்ளனர். நான்கு இலட்சம் ரூபாய் பெறுமதியான மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்ற சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் ஆரம்பித்துள்ளதுடன், சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிளைத் திருடிச் செல்லும் காட்சிகள், நகரிலுள்ள பல பாதுகாப்பு கமெராக்களில் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கேகாலை மாவட்டத்தில்

# டெங்குவால் ஐவர் மரணம்

**என்.ஆராச்சி**

2022 ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில், கேகாலை மாவட்டத்தில் டெங்குவால் ஐவர் மரணமடைந்துள்ளனர் என கேகாலை மாவட்ட தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இதுவரை 2,612 பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் இதில் அதிகமானவர்கள் கேகாலை, மாவனெல்ல ஆகிய சுகாதாரப் பிரிவுகளில் அடையாளம் காணப்பட்டனர் என்றும் இதற்கமைய, கேகாலையில் 567 பேரும் மாவனெல்லயில் 500 பேரும் இதுவரை டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், தெஹியோவிட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 314 பேரும் ருவன்வெலயில் 240 பேரும் வரக்காபொலயில் 230 பேரும் கலிகமுவயில் 221 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போதைய மழையுடனான வானிலையால் மீண்டும் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்குமென எச்சரித்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.

ஆற்றோர விருந்து ஆபத்தில் முடிந்தது

# மாணவர்களில் ஒருவர் மாயம்

**ஷேன் செனவிரத்ன**

பாடசாலை மாணவர்கள் சிலர் இணைந்து, கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வராதென்ன பகுதியில் மகாவலி ஆற்றுக்கு அருகில் விருந்துபசாரம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்த போது, மாணவர்கள் இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

எனினும் இதன்போது ஒரு மாணவர் ஆற்றில் இருந்த பாறையை இறுகப் பற்றிக்கொண்டதால் கடும் பிரயத்தனத்தின் பின்னர் மீட்கப்பட்டுள்ள நிலையில், மற்றைய மாணவர் காணாமல் போயுள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டி, கிங்ஸ்வூட் கல்லூரி மாணவன் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், கன்னொருவ ரணபிம பாடசாலையின் மாணவன் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளங்கன் வைத்தியசாலைக்கு

# யு.பி.எஸ் இயந்திரம் கையளிப்பு

**டி.ஷங்கீதன்**

டிக்கோயா ரோட்டறி கழகத்தின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலியா கெளி ஹில்ஸ் ரோட்டறி கழகத்தின் பங்களிப்புடன் 230,000 ரூபாய் பெறுமதியான யு.பி. எஸ் இயந்திரம் கிளங்கன் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியாசாலைக்கு மிகவும் அவசரமாக தேவைப்பட்ட மின்சாரத்தை கட்டுப்படுத்தும் (யு.பி.எஸ்) இயந்திரம் அவுஸ்திரேலியா கெளி ஹில்ஸ் ரோட்டறி கழகத்தின் முழுமையான பங்களிப்புடன் வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் (19) கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் டிக்கோயா ரோட்டறி கழகத்தின் தலைவர் சுப்பிரமணியம் தியாகுவும் உறுப்பினர்களான டொக்டர் சந்திரராஜன் ராஜேந்திரன், சோமசுந்தரம்




சப்பாணி ஆகியோர் கலந்து கொண்டதுடன் கிளங்கன் வைத்தியசாலையின் சார்பாக வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எப்.எம் பஸ்லி கலந்து கொண்டதுடன் அவரிடம் இயந்திரம் கையளிக்கப்பட்டது.

இந்த இயந்திரம் இல்லாத காரணத்தால் பல சிரமங்களை தாங்கள் எதிர் நோக்கியதாகவும் இந்த இயந்திரம் கிடைக்கப்பெற்றதால் நோயாளர்களுக்கு தங்கு தடையின்றி பல சேவைகளை முன்னெடுக்க முடியும் எனவும் வைத்தியர் பஸ்லி தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நிலவும் மிகவும் இறுக்கமான பொருளாதார பின்னடைவு காரணமாக, அரசாங்கத்தால் இவ்வாறான உபகரணங்களை அவசரமாகவும் இலகுவாகவும் பெற்றுக் கொடுக்க முடியாத ஒரு நிலைமையில் இந்த இயந்திரத்தை பெற்றுக் கொடுக்க முன்வந்த அவுஸ்திரேலியா கெளி ஹில்ஸ் மற்றும் டிக்கோயா ரோட்டறி கழகத்திற்கும் நன்றிகளை தெரிவித்து கொள்வதாகவும் வைத்திய அதிகாரி வைத்தியர் பஸ்லி மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க விவசாயத் திணைக்களத்தால்

# சப்ரகமுவ மாகாண மாணவர்களுக்கு உதவி

**சிவாணி ஸ்ரீ**

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவுக்கும் அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் அண்மையில் இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

அமெரிக்கா நாட்டின் விவசாயத் திணைக்களம் மற்றும் 'சேவ் த சில்ரன்' அமைப்பும் இணைந்து, இரத்தினபுரி மாவட்டத்தில் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிலைமைகளை கட்டியெழுப்புவதையும் ஆரம்ப வகுப்புகளில் உள்ள குழந்தைகளிடையே கல்வி அறிவை மேம்படுத்துவத்துவதையும் நோக்கமாகக்கொண்டு மேற்படி கலந்துரையாடல் நடைபெற்றது.

தெரிவுசெய்யப்பட்ட ஏழு மாவட்டங்களிலும் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்ப கல்வி கற்கும் 856 பாடசாலைகளை சேர்ந்த 108,273 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் நன்மை அடையவுள்ளனர்.



இதன்போது இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினக்கல் தொழில்துறையினர்களின் பிள்ளைகள் மற்றும் பெருந்தோட்ட சமூகம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# ஆடி அடங்கும் வாழ்க்கை அர்த்தபுஷ்டியாக இருக்கவேண்டும்

மரண வீடுகளில் மட்டுமே, மரணித்தவரைப் பற்றி பலரும் புகழ்பாடிக்கொண்டிருப்பர். 'நல்ல மனிதன்; இன்னும் சில நாள்களுக்கு வாழ்ந்திருக்கலாம்; என்னதான் இருந்தாலும் நான் விட்டுக்கொடுத்திருக்க வேண்டும்' என்று அவருடன் மனம் கசந்து இருந்தவர்கள்கூட, கூறுவதைக் கேள்வி பட்டிருக்கின்றோம்.

ஒருவரின் பெறுமதி, அவரின் மரணத்துக்குப் பின்னரே குடும்பத்துக்கும் அக்கம் பக்கத்தினருக்கும் தெரியவரும். ஏன், சிலரின் மரணம் நாட்டுக்கும் உலகுக்கும் உணர்த்தும்.

"இன்னும் ஏன்தான் வாழ்கின்றார்களோ" எனச் சிலரை தூற்றுவதையும் கேட்டிருகின்றோம். அந்தளவுக்கு எவ்விதமான பிரயோசனமும் இன்றி, மற்றையவர்களுக்கு இடைஞ்சலாக வாழ்ந்திருப்பர்.

ஒவ்வொருடைய இறப்புக்குப் பின்னாலும் அவரை பற்றி பேசவேண்டுமெனில், வாழும் காலத்தில் மற்றையவர்களுக்கு பயன்தரும் வகையிலும் முன்னுதாரணமாகவும் வாழவேண்டும். அவ்வாறு வாழமுடியாவின், ஏனையோருக்கு தொந்தரவு கொடுக்காமல் வாழவேண்டும்.

நமது நாட்டை பொறுத்தவரையில், நாயொன்றும், குரங்கு ஒன்றும் செய்த செயல்கள், ஒவ்வொருடைய மனங்களையும் நெருடச் செய்திருந்தன. கண்டியில், வீதியில் கிடந்த பணப்பையை, நாய் கௌவிக்கொண்டு வீட்டுக்குக் கொண்டுவந்து போட்டுள்ளது.

பணப்பையை திறந்துபார்த்த நாயின் எஜமானர், அதிலிருந்த தொலைபேசி இலக்கமொன்றுக்கு தொடர்பினை ஏற்படுத்தி, பணப்பைக்கு சொந்தமானவரிடம் ஒப்படைத்தமை மனதை நெருடவே செய்தது.

இதே பணப்பையை, வீதியில் சென்றிருந்தவர்களில் யாராவது எடுத்திருந்தால், உரிமையாளரிடம் ஒப்படைத்திருப்பாரா என்பது சந்தேகமே! இவ்வாறான நெருக்கடியான காலக்கட்டத்திலும் அடுத்தவர்களின் பொருட்களுக்கு ஆசைப்படாது, மீள ஒப்படைக்கும் கனவான்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இந்நிலையில், தனக்கு உணவு கொடுத்தவர் மரணித்ததன் பின்னர், அவருடைய சடலத்தில் ஏறிநின்று, மூச்சு இருக்கிறதா எனப் பார்த்து, கன்னத்தில் முத்தமிட்டு, கால்களை தொட்டு வணங்கிய குரங்கின் செயல், சகலரையும் ஒருகணம் சிந்திக்கச் செய்துவிட்டது.

மட்டக்களப்பில் இடம்பெற்ற இந்தச் சம்பவம், ஒவ்வொருவருக்கும் ஒரு பாடத்தை கற்பித்துக்கொடுத்துள்ளது. வாழும்போது, ஏனையோருக்குப் பிரயோசனப்படும் வகையில் வாழ்க்கையை கொண்டுநடத்தினால், மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகளும் நன்றியுடையவனாய் இருக்கும் என்பதற்கு இந்தக் குரங்கின் இறுதி அஞ்சலி, நல்லதோர் உதாரணமாகும்.

'ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா' என்ற பாடல் வரிகளை, எப்போதும் நினைவில் வைத்துக்கொண்டால், வாழ்க்கையும் அர்த்தபுஷ்டியானதாக இருக்கும். ஆனால், பலரும் அவ்வாறு வாழ்வதில்லை.

ஏதோவொரு வகையில், மற்றையோருக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலேயே நடந்துகொள்கின்றனர். முற்றும் துறந்தவர்கள் கூட, கடையொன்றில் அலைபேசியைத் திருடிச் செல்லும் காட்சி, சமூக வலைத்தளங்களில் வைரலாகி, ஏனையோரை முகம் சுளிக்கச் செய்துவிட்டது.

ஆக, வாழும்போதே ஏனையவர்களை வாழ வைக்காவிட்டாலும் பரவாயில்லை, இடையூறு விளைவிக்காது இருந்தாலே வாழ்க்கை அர்த்தபுஷ்டியானதாக அமையும் என்பதை இன்றிலிருந்தாவது கற்போம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஒருசிலர் தங்களுக்கு எல்லாமே தெரியும் என வாதிடுவார்கள். தெரியாத விடயத்தைத் தெரியாது என்று சொல்வதில் ஏது வெட்கம்?

பொய்யுடன் நட்புக் கொள்பவர்களுக்கு, சின்னச் சின்ன விடயங்களுக்கும் பொய் சொல்லாமல் இருக்க முடியாது. பொய் சொல்லி சில வேளைகளில் அவமானப்பட்டாலும் கூட, அவர்களால் உண்மைக்கு விரோதமாகப் பேசாதுவிட்டால், அவர்களால் திருப்திப்படவே முடியாது. வீம்புக்காகச் சிலர் தங்களை செல்வந்தராகக் காட்டிக்கொள்வார்கள். அதேசமயம் வசதி உள்ளவர்கள் கூட, யாராவது தங்களிடம் உதவி கேட்டுவிடுவார்கள் என எண்ணி, தங்களிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லை எனவும் சொல்வார்கள்.

பேராசை உள்ளவர்கள், குறுக்கு வழியில் பணம் தேடுபவர்கள் போன்றோர் பொய்மையின் உள்ளே அடங்கி விடுகின்றார்கள். இவர்கள் எதற்கும் வெட்கப்படுவதும் இல்லை.

எல்லோரும் சிறப்பாக வாழ முடியும். அதற்காக முயற்சிகளைச் செய்யாமல் இருப்பதும், கஸ்டப்பட்டு உழைக்காமல் வாழ எண்ணுவதும், தனக்குத் தானே தண்டனை வழங்குவது போலாகும். கைநீட்டி கண்டபடி இரந்து வாழ்வதைவிட, நிமிர்ந்து வாழ வேண்டும். துணிந்து எந்த வேலையையும் செய்யத் தயாராக வேண்டும். துணிச்சலுடன் வாழ்வதுதான் உயர் கௌரவம்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வானம் பார்க்கும் ஓட்டமாவடி பொதுநூலகம்

வானம் தெரியும் நிலையில், ஓட்டமாவடி பொதுநூலக கட்டடம் சேதமடைந்து காணப்படுகிறது. கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாகத்தின் கீழுள்ள ஓட்டமாவடி பொதுநூலகக் கட்டடமே, இவ்வாறு மிக நீண்ட காலமாக சேதமடைந்து காட்சியளிக்கிறது.

கூரைகள் உடைந்தும், கதவுகள் சேதமடைந்த நிலையிலும் காணப்படும் இக் கட்டடத் தொகுதி, புறாக்களின் வசிப்பிடமாக மாறி வருகிறது.

தாய், சேய் நிலையம் அமைந்துள்ள இக் கட்டடத் தொகுதிக்கு, குழந்தைகளுடன் வரும் தாய்மார்கள், பல்வேறு அசௌகரியங்ளை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், எதிர்வரும் வாரங்கள், மழைக் காலம் என்பதால், கூரைகள் வழியாக கட்டடத்துக்குள் மழைநீர் தேங்கி நின்று, கட்டடத்துக்கு இன்னும் பாரிய சேதங்கள் ஏற்படும் நிலையும் காணப்படுகிறது.

எனவே, இதனை பிரதேச சபை நிர்வாகத்தினர் கவனமெடுத்து, புனர்நிர்மாணம் செய்ய வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுக்கின்றனர்.

எச்.எம்.எம் பர்ஸான்



புலம்பெயர் மக்களின் உதவி:

# இன்னும் எவ்வளவு காலத்துக்கு?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

புலப்பெயர்வு ஏற்படுத்திய முக்கியமான விளைவுகளில் ஒன்று, இலங்கையில் இருக்கின்ற உறவுகளுக்கான தொடர்ச்சியான நிதியுதவியை சாத்தியப்படுத்தியமை ஆகும். கடந்த அரைநூற்றாண்டாக, இச்செயற்பாடு தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகள், முழுமையாக இந்த வெளிநாட்டு உதவியால் பயன் அடைந்தன என்று சொல்லவியலாது. ஆனால், வடக்கு - கிழக்கின் பொருளாதார இயங்கியலில், நாட்டுக்குள் வருகின்ற பணம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த வெளிநாட்டுப் பணம், குறிப்பாக வடக்கில் பல்வேறுபட்ட தாக்கங்களை கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஏற்படுத்தி இருக்கிறது. இன்றுவரை விரிவாக ஆய்வுக்குட்படாத ஒன்றாகவே இது இருக்கிறது.

இந்தப் புலம்பெயர் உதவி, என்றென்றைக்குமானது அல்ல! ஆனால், அதுகுறித்த உணர்வு சமூகத்தில் இருக்கின்றதா என்ற மிகப்பெரிய வினா தொக்கி நிற்கிறது. இன்றுவரை பேசாப்பொருளாய், இன்னும் சரியாகச் சொல்வதானால், பேசவிரும்பாத பொருளாய் இருக்கின்றது.

ஈழத்தமிழரின் புலம்பெயர்வின் தொடக்கங்கள் உயர்கல்வி, மேநிலையாக்கம் ஆகியவற்றையே மையமாகக் கொண்டிருந்தது. 1980களில் முனைப்படைந்த இனமுரண்பாடு, போராக மாற்றமடைந்ததைத் தொடர்ந்து, பலருக்கு வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான வாய்ப்பையும் அகதி அந்தஸ்ததைப் பெற்றுக்கொள்வதற்கான வழியையும் ஏற்படுத்திக் கொடுத்தது. இவ்வாறு வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தோரில் பெரும்பாலானோர், பொருளாதார அகதிகளாவர்.

இன்று இந்த வெளிநாட்டுப் பணம், ஐந்து விதமான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது.

முதலாவது, பொருளாதார வலுவை வழங்குவதன் மூலம், பலர் கற்பதற்கும் குடும்பங்கள் உயிர்வாழ்வதற்கும் நெருக்கடிகளின் போது தப்பிப் பிழைப்பதற்குமான வாய்ப்பை வழங்கியுள்ளது.

இரண்டாவது, உள்ளோருக்கும் இல்லாதோருக்கும் இடையிலான மிகப்பெரிய இடைவெளியையும் சமூக அசமத்துவத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மூன்றாவது, வெளிநாட்டுப் பணத்தில் தங்கிவாழும் சமூகமொன்றையும் வெளிநாட்டுப் பணத்தின் மீதான தொடர்ச்சியான எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

நான்காவது, உழைப்பின் மதிப்பின் மீதான மரியாதை குறைந்துள்ளதோடு, வெளிநாட்டுக்குப் புலம்பெயருதலே 'வளமான வாழ்வுக்கு வழி' என்ற எண்ணப்பாங்கையும் உருவாக்கியுள்ளது.

ஐந்தாவது, பணத்தின் மதிப்புப் தெரியாமல், ஆடம்பரங்களுக்கும் அளவு கடந்த நுகர்வுப் பண்பாட்டுக்கும் வித்திட்டுள்ளது.

இந்த ஐந்து விளைவுகளும், தனித்தனியாக ஆழமாக ஆராயப்பட வேண்டியவை. ஆனால், இன்றைய காலச்சூழலில் இரண்டு முக்கியமான வினாக்களூடு, இந்தக் கட்டுரையை அணுக விரும்புகிறேன்.

முதலாவது, இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த 'வெளிநாட்டுப் பணத்தின்' வருகை சாத்தியம்?

இரண்டாவது, அதிகரித்துள்ள உலகளாவிய பொருளாதார நெருக்கடி, இவ்வாறு அனுப்பப்படும் 'வெளிநாட்டுப் பணத்தில்' ஏற்படுத்தப்போகும் தாக்கம் என்ன?

கடந்த அரைநூற்றாண்டுகளாக இலங்கைக்கு பணம் அனுப்பியவர்கள், இன்னமும் அனுப்புபவர்கள் புலம்பெயர்ந்த முதலாவது தலைமுறையினர் ஆவர். இதை அவர்கள் ஒரு கடமையாகச் செய்தார்கள்; செய்கிறார்கள்.

இந்த உதவி பல்வகைப்பட்டதாக இருக்கிறது. உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு, ஊருக்கு, நலிந்தோருக்கு என அது இன்றுவரை தொடர்கிறது. புலம்பெயர்ந்து வாழும் பலர், தங்கள் தேவைகளைக் குறைத்து, ஆசைகளை இறுத்து, இன்றுவரை இப்பொருளாதார உதவியைச் செய்கிறார்கள்.

இந்த முதலாம் தலைமுறையின் காலம், விரைவில் முடிவுக்கு வருகிறது. பலர் ஒய்வு பெற்றுவிட்டார்கள்; நோயாளியாகி உள்ளார்கள்; இன்னும் பலர் விரைவில் ஒய்வு காலத்தை நெருங்குகிறார்கள். எனவே, இவர்களால் நீண்டகாலத்துக்குத் தாய்நாட்டுக்குப் பணம் அனுப்ப இயலாது.

இரண்டாம், மூன்றாம் தலைமுறையினருக்கும் இலங்கைக்குமான உறவு மிகவும் குறைவு. அவர்கள், தங்களது பெற்றோர்கள் செய்த பணியை ஒருபோதும் செய்யப் போவதில்லை. எனவே, இலங்கைக்கு அனுப்பப்படும் வெளிநாட்டுப் பணத்தின் அளவு, இன்னும் ஐந்து தொடக்கம் 10 ஆண்டுகளுக்குள் பாரிய சரிவைச் சந்திக்கும்.

2002ஆம் ஆண்டு, சமாதான காலத்துக்குப் பின்னர் புலம்பெயர்ந்தவர்கள், இன்னமும் வலுவான உழைப்பாளிகளாக இருக்கிறார்கள். இன்றைய உலகளாவிய பொருளாதார நெருக்கடி, அவர்களது சேமிப்பில் மிகப்பெரிய நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

2023ஆம் ஆண்டு பொருளாதார ரீதியாக, மிகவும் கடினமான ஆண்டாக இருக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்நிலையில், அவர்களாலும் முன்னர் அனுப்பியளவு பணத்தை, இலங்கையில் உள்ள உறவுகளுக்கு அனுப்ப இயலுமா என்ற வினா இருக்கின்றது. இவ்விரண்டும், இலங்கையில் வெளிநாட்டுப் பணத்தில் தங்கிவாழும் மக்களுக்கான எச்சரிக்கைக் குறிகள் என எடுத்துக்கொள்ள வேண்டும்.

புலம்பெயர்ந்து போனவர்களை, ஒரு 'பணம் காய்க்கும் மரம்' போல பார்க்கும் பார்வை, காலங்காலமாக இருந்து வருகிறது. "நீங்கள் போய்த் தப்பிவிட்டீர்கள்; நாங்கள் கஷ்டப்படுகிறோம்" என்ற வகையிலான சொல்லாடல்கள் மூலம், புலம்பெயர்ந்தோரைக் குற்ற உணர்வுக்கு ஆட்படுத்தும் செயல்கள் நடந்துள்ளன; இன்னமும் நடக்கின்றன.

இவ்விடத்தில், கவிஞர் சி. சிவசேகரம் எழுதிய 'பணங்காய்ச்சி மரம்' என்ற கவிதையை இங்கு தருவது இந்தக் கட்டுரை குறித்த புரிதலை வளப்படுத்தும்.

பணங்காய்ச்சி மரமேறிக் காய்பிடுங்கவும் மரத்தை
உலுப்பிக் காய் பொறுக்கவும் பணங்காய்ச்சி மரமிருக்கும்
இடந்தேடி அவர்கள் எல்லோரும் தான் போனார்கள்
ஆண்களும் போனார்கள், பெண்களும் போனார்கள்.
வலியவர்களும் மெலியவர்களும் போனார்கள்.
கற்றவர்களும் கல்லாதவர்களும் நல்லவர்களும்
அல்லாதவர்களும் உள்ளவர்களும் இல்லாதவர்களுமாக
அவர்கள் எல்லோரும் போனார்கள். பணங்காய்ச்சிமரம்
டொலர், டொயிஷ்மார்க், யென், பவுண் என
வண்ண வணமாய்க் காய்த்துத்தள்ளியது. பணங்காய்ச்சி
மரத்தைநாடிக் கிராமத்திலிருந்து பட்டணத்துக்குப்
போனார்கள். பட்டணத்திலிருந்து பெருநகரத்துக்கும்
நாட்டைவிட்டு நாட்டுக்கும் போனார்கள். நடந்தும்
வண்டில்களேறி நகர்ந்தும் போனார்கள். கடலிலுங்
காற்றிலும் மிதந்தும் போனார்கள். குதிரைகளின் முதுகில்
அமர்ந்தும் வாகனங்களின் அடியிற் பதுங்கிக்கிடந்தும்
போனார்கள். மின்சாரவேலிகளைத் தாண்டிக் குதித்தும்
பாதாளச் சாக்கடை வழியே குனிந்தும் போனார்கள்.
எப்படியெப்படிப் போகலாமோ
அப்படியப்படியெல்லாம் பணங்காய்ச்சி மரத்தின்
திசை நோக்கி அவர்கள் எல்லாரும் போனார்கள்.
ஊரைவிட்டும் உறவைவிட்டும் போவதை எண்ணி
அழுதுகொண்டு போனார்கள். சிரித்துக்கொண்டு
போனார்கள். சஞ்சலத்துடன் போனார்கள்.
சந்தேகங்களூன், நிச்சயத்துடன், நம்பிக்கைகளூடன்
போனார்கள். போன எல்லோருமே
எதிர்பார்ப்புகளூடன் தான் போனார்கள். பணங்காய்ச்சி
மரத்துக்குப் பூசைகள், தோத்திரங்கள், பணிவிடைகள்
எல்லாமே செய்தார்கள். பணங்காய்ச்சி மரம் கொஞ்சம்
உண்ணவும் உடுக்கவும் கொடுத்தது. தங்குவதற்கு நிழலுங்
கொடுத்தது. விளையாடவும் பொழுதைப்போக்கவும்
வழிகளைக்கொடுத்தது. பிடுங்கியும் பொறுக்கியும் எடுத்த
காய்களை விலையாக வாங்கிக்கொண்டது. அவர்களது
சுதந்திரத்தைக் களவாடிக்கொண்டது. பணங்காய்ச்சி
மரத்துக்குச் சொந்த மண்ணென்று எதுவுமில்லை என்றும்
அதன் வேர்கள் உலகெங்கும் பரவி எல்லா மண்களதும்
வளங்களை உறுஞ்சிக்கொள்கிறது என்றும்
அறியமாட்டாதவர்கள் அறிந்து சொன்னவர்மீது
எரிந்து சினந்தார்கள். பணங்காய்ச்சி மரத்துக்குப்
பணிவிடை செய்வதே தங்களது பிறவிப்பயன் என்று
உரத்துக் கூறினார்கள். பணங்காய்ச்சி மரத்தை நோக்கிய
தங்களது பயணம் வீண்போகவில்லை என்று
மெய்யாகவே அவர்கள் நம்புகிறார்கள்.
இன்னமும் பணங்காய்ச்சி மரத்தை நோக்கிப்
போகிறவர்களை எல்லோரும்தான் வரவேற்கிறார்கள்.
எல்லோருந்தான் வழிமறிக்கிறார்கள்.

இந்தக் கவிதை புலம்பெயர் வாழ்வின் இன்னொரு பக்கத்தைச் சொல்கிறது. ஆனால், இந்தப் பக்கத்தைப் பற்றிப் பேசுவதற்கு புலம்பெயர்ந்தோரும் தயாரில்லை; விளங்கிக் கொள்வதற்கு ஊரில் உள்ளோரும் தயாரில்லை.

இனிவரும் காலத்தில், இந்த வெளிநாட்டுப் பணத்தின் வருகையில் கணிசமானளவு குறைவு ஏற்படப்போவது உறுதி. இந்தப் பணம் வடபகுதியின் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றுகிறது. 'நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்குமாங்கே பொசிவது போல்', இந்தப் பணம் ஏற்படுத்தியுள்ள நுகர்வும் புதிய சாத்தியங்களும் பலருக்கு வேலைவாய்ப்புகளை, வருமானத்தை வழங்கியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

இந்தப் பின்புலத்தில், இந்த வெளிநாட்டுப் பணம் தொடர்ச்சியாக வராதுவிடின் அதை நம்பியிருப்போரின் எதிர்காலம் என்ன? உள்ளூர் பொருளாதாரத்தில் அதன் தாக்கம் என்ன? சமூகரீதியாக இது ஏற்படுத்தப்போகும் நெருக்கடிகள் என்ன போன்றன குறித்து, ஆழமாகச் சிந்திக்கத் தொடங்க வேண்டும்.

பெருந்தொற்றும், இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் சுயபொருளாதார முயலுகைகளின் தேவையை முன்னெப்போதையும் விட, வலுவாக எடுத்துக் காட்டியுள்ளன. ஆனால், இப்போதும் 'பொருளாதார நெருக்கடி தென்பகுதிக்குத்தான், வடபுலத்திற்கல்ல' என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி, உலகளாவியதாக உருமாறுகிறது. இது இன்னொரு நெருக்கடியை நோக்கி உந்தித் தள்ளுகிறது. எனவே, எமக்கான பொருளாதார மாதிரிகள், தப்பிப்பிழைப்பதற்கான வழிகள், நீண்டகாலத் திட்டங்கள் குறித்து சிந்தித்தாக வேண்டும். அதற்கான தொடக்கம் நாட்டுக்குள் வருகின்ற வெளிநாட்டுப் பணத்துக்கு ஒரு காலாவதித் திகதி உண்டு என்ற உண்மையை ஏற்றுக் கொள்வதே!

எமது பொருளாதார இயங்கியலின் தன்மை மாறியாக வேண்டும். தொடர்ந்தும் ஒரு தங்குநிலைப் பொருளாதாரமாகக் காலம் தள்ளவியலாது. அவ்வாறு காலம் தள்ள நினைத்தால், அது உயிர்ப்பான செயலூக்கமாக இருக்காது. அது, நீண்டகாலத்துக்கு தலைமுறைகள் தாண்டிப் பாதிப்புகளை ஏற்படுத்தும்.

இந்தத் தங்குநிலை பொருளாதாரத்துக்கான முடிவுக்கான முன்னுரையை எழுத, நாமெல்லோரும் தயாராக இருக்கிறோமா?




# ILO இன் 'Better Work' வேலைத்திட்டத்துக்கு JAAF ஆதரவு

கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF), ILOவின் Better Work வேலைத் திட்டத்திற்கு தனது முழு ஆதரவையும் தெரிவித்துள்ளது. சமீப காலத்தில் தொழிற்றுறை பின்னடைவிலிருந்து மீளவும் Better Work அனுபவங்கள், கருவிகள் மற்றும் கூட்டாண்மை மூலம் மனித வளங்களை மேம்படுத்தவும் ILO, Better Work (BW) திட்டத்தை அறிமுகப்படுத்தியது. ஆடைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர் சமூகத்திற்கு, சிறந்த வாழ்க்கைத் தரத்தை அடைவதில் இலங்கை ஏற்கெனவே உயர் பங்களிப்பை வழங்கி வருவதுடன், இலங்கைக்கு ஏற்றவாறு இந்த BW வேலைத்திட்டம் ஆடைத் தொழிற்றுறை ஊழியர்களுக்கான நலன்புரி திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்குகிறது.

இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதித்துறையான ஆடைத் தொழிலில் Better Work கவனம் செலுத்தியுள்ளது. இது நாடு முழுவதும் உள்ள 350 உற்பத்தி ஆலைகள் மூலம், சுமார் ஒரு மில்லியன் தொழிலாளர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை வழங்குகிறது. தொழில் பாதுகாப்பு, ஆரோக்கியம், பெண் தொழிலாளர்களுக்கு தலைமைத்துவ திறன் பயிற்சி திட்டங்கள், தொழில் மேம்பாட்டு திட்டங்களை ஏற்பாடு செய்தல், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (SMEs) ஊக்குவித்து, பாலின சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை மேம்படுத்துதல், நிதி கல்வியறிவு பயிற்சி, SME தொழிற்சாலை மேம்பாட்டு கருவிகள் வழங்குதல் என்பவற்றில் Better Work கவனம் செலுத்துகிறது.

ஆடைத் தொழிற்றுறை சர்வதேச அளவில் பெற்றுள்ள நம்பிக்கையும் நற்பெயரும், மனித வளங்களுக்கான நெறிமுறைக் கொள்கைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. பாலின சமத்துவம், பணியாளர் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றில் கட்டமைக்கப்பட்ட ஒரு நல்ல பணிச்சூழலை உறுதி செய்வதற்கான உறுதிப்பாட்டை வலுப்படுத்த, உள்ளூர் மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடன் கூட்டுசேர்வதற்கான ஒரு வாய்ப்பபே Better Work என JAAF உறுதியாக நம்புகிறது.

இந்த முயற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்நிகழ்வில் கலந்துகொண்ட தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் மனுஷ நாணயக்கார, "ஆடைத் துறையில் ஏற்கெனவே உயர் தரத்தை உருவாக்குவதற்கு சிறந்த OSH நடைமுறைகள் மற்றும் தரநிலைகளை ஊக்குவிப்பதில் இத்திட்டம் மற்றுமொரு முக்கிய படியாக பார்க்கப்படுகிறது. இது தொழிற்றுறையின் முக்கிய பங்குதாரர்களுக்கு ஆடைத் தொழிலுக்கான எமது அர்ப்பணிப்பை தெளிவாக நிரூபிக்கிறது" எனத் தெரிவித்தார்.

தொற்றுநோய் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையின் ஆரம்பத்துடன், ஆடைத் தொழில் துறையானது தமது தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நலனை உறுதி செய்வதற்காக பரந்த அளவிலான திட்டங்களை செயற்படுத்தியது.

ஊழியர்களின் குழந்தைகளுக்கு இலவச பாடசாலைப் புத்தகங்கள், மருத்துவ வசதிகள், கர்ப்பிணிப் பெண்களுக்கு சிறப்பு உணவுப் பொதிகள் என்பன வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டம் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களால் செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்கள், தங்கள் ஊழியர்களின் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான நலன்புரி நடவடிக்கைகளை செயற்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஜூன் 2022 நிலைவரப்படி, சுமார் 80% ஆடை உற்பத்தியாளர்கள் ஆண்டு சம்பள உயர்வுக்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளையும் உயர்த்தியுள்ளனர்.

SLT–MOBITEL தேசிய வியாபார தொலைபேசிக் கோவையால்

# eDirectory மற்றும் இணையத்தளம் வெளியீடு

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் வழங்குநரான SLT-MOBITEL இன் முழு உரிமையாண்மையின் கீழ் இயங்கும், SLT டிஜிட்டல் சேர்விசஸ் (Pvt) லிமிடெட் (SLT-DIGITAL), பிந்திய மெருகேற்றம் செய்யப்பட்ட தேசிய வியாபார கோவையான eDirectory மற்றும் இணையத்தளத்தை அண்மையில் அறிமுகம் செய்திருந்தது.




மேம்படுத்தப்பட்ட eDirectory மற்றும் இணையத்தளத்தினூடாக வாடிக்கையாளர்களுக்கு மற்றும் விற்பனையாளர்களுக்கு, இலங்கையின் அதிகளவு மெருகேற்றம் செய்யப்பட்ட வியாபார தொலைபேசி விவரக்கோவை ஆதாரம் என அதிகளவு பெறுமதி சேர்ப்பு வழங்கப்படுகின்றது. புதிய வெளியீட்டினூடாக 'Power of True Local Search' என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேம்படுத்திய ஒன்லைன் கட்டமைப்பினூடாக, தினசரி 10,000 ஒன்லைன் பார்வையாளர்கள் கவரப்படுவதுடன், இலங்கையின் அதிகளவு செம்மையாக்கம் செய்யப்பட்ட தேடல் தளமாக (optimised search engine) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நுண், சிறு மற்றும் நடுத்தரவளவு வியாபாரங்களின் பிரசன்னத்தை மேம்படுத்தும் வகையில், மேம்படுத்தப்பட்ட தேசிய வியாபார தொலைபேசி விவரக் கோவையால், உறுதி செய்யப்பட்ட தொடர்பாடல் தகவல்கள் வழங்கப்படுவதுடன், இந்த நிறுவனங்களுக்கு பெருமளவு தோற்றப்பாட்டையும் இலகுவான வாடிக்கையாளர் அணுகலையும் வழங்குகின்றது. Business to Business (B2B) அடங்கலான விற்பனையாளர்களுக்கு Search Engine Optimization (SEO) மற்றும் Search Engine Marketing (SEM) போன்றவற்றை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் காணப்படுவதால், விற்பனையை அதிகரித்துக் கொள்வது மற்றும் அதிகளவு வாடிக்கையாளர்களை சென்றடையக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

eDirectory இல் பதிவு செய்துள்ள சகல வியாபாரங்களுக்கும், சகல டிஜிட்டல் சந்தைப்படுத்தல், இணையத்தள வடிவமைப்பு மற்றும் விளம்பரத் தீர்வுகளை வழங்கி ஆதரவளிக்கும் வகையில் இந்தக் கட்டமைப்பு அமைந்துள்ளது. eDirectory இல் பதிவு செய்யப்பட்டுள்ள வியாபாரங்களுக்கு, அரசாங்கத்தின் விலைமனுக்களுக்கு கோரல்களை சமர்ப்பிக்க முடியும். இந்த வியாபாரங்கள் அரசாங்கத்தின் திறைசேரியால் அனுமதியளிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனை நிலையங்களாக கருதப்படுவதுடன், அவற்றுக்கு மையப்படுத்தப்பட்ட அரச கொள்முதல் வாய்ப்புகளை மேம்படுத்துவதாக அமைந்திருக்கும்.

விற்பனையாளர்களுக்கு தமது பொருட்கள் மற்றும் சேவைகளை வெளிப்படுத்துவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வழிமுறைகள் காணப்படுவதால், eDirectory வாடிக்கையாளர்களுக்கு தற்போது மேம்படுத்தப்பட்ட வணிகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அச்சிடப்பட்ட தொலைபேசி விவரக் கோவை, டிஜிட்டல் தொலைபேசி விவரக் கோவை, மொபைல் app, eBook, அழைப்பு நிலையங்கள் (SLT 1212, மொபைல் 444), IVR ஊக்குவிப்புத் திட்டங்கள், டிஜிட்டல் சந்தைப்படுத்தல், சமூக வலைத்தள விளம்பரங்கள், இணையத்தள வடிவமைப்பு போன்றவற்றினூடாக சகல பங்காளர்களுக்கும் தொடர்ச்சியாக பெறுமதி உருவாக்கப்படுகின்றது.

டிஜிட்டல் சந்தைப்படுத்தல், வணிக விளம்பரத் தொலைபேசிக் கோவை, டிஜிட்டல் தொலைபேசிக் கோவைத் தீர்வுகள், இணைய வடிவமைப்பு தீர்வுகள், நிகழ்வுகள் முகாமைத்துவம், செயற்படுத்தல் மற்றும் வர்த்தக நாமச் சேவைகள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தொடர்பாடல் தீர்வுகள் போன்றவற்றில் SLT-DIGITAL விசேடத்துவத்தைக் கொண்டுள்ளதுடன், நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபார (MSMBs) சமூகத்தில் அதிகளவு விரும்பப்படும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் தீர்வுகள் வழங்குநராகத் திகழ்கின்றது.

மும்பை

# 3 இடங்களில் குண்டு வெடிக்கும்

## பொலிஸாருக்கு எச்சரிக்கை; மும்பையில் மக்கள் அதிகம்

கூடக்கூடிய 3 இடங்களில் குண்டு வெடிக்கும் என தொலைபேசி மூலமாகப் பொலிஸாருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பொலிஸார் தெரிவிக்கையில், "இன்பினிட்டி மோல், ஜூஹூவில் உள்ள பி.வி. ஆர். மோல், விமான நிலையத்தில் உள்ள சகாரா உணவகம் ஆகிய 3 இடங்களில் குண்டு வெடிக்கும் என மர்ம நபர் தொலைபேசியில் மிரட்டல் விடுத்துள்ளார். இந்நிலையில் குறித்த மர்ம நபரைக் கண்டறியும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றோம்" என்றார்.






திருச்சூர்

## மகனை எரித்துக் கொன்ற தந்தை

கேரள மாநிலம் திருச்சூர் கேச்சேரியை சேர்ந்தவர் சுலைமான். 60 வயதான இவருக்கு மனநலம் குன்றிய 28 வயதான சகத் என்ற மகன் உள்ளார்.

இந்நிலையில், அண்மையில் வீட்டில் யாரும் இல்லாத வேளை, பெட்ரோல் கேனுடன் வந்த சுலைமான், உறங்கிக் கொண்டிருந்த சகத் மீது திடீரெனப் பெட்ரோலை ஊற்றி, தீ வைத்து விட்டுத் தப்பியோடிவிட்டார்.

இதனால் படுகாயங்களுக்குள்ளான சகத்தை அக்கம் பக்கத்தினர் மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். எனினும் அங்கு சிகிச்சை பலனின்றி சகத் உயிரிழந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தப்பி ஓடிய சுலைமானைக் பொலிஸார் கைது விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதன்போது, "தினம், தினம் மகன் படும் துயரத்தை தாங்கிக் கொள்ள முடியாததால், உயிரோடு எரித்துக் கொன்று விட்டடேன்" என சுலைமான் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.







மத்திய பிரதேசம்

## திருடிய தாய் மீது மகன் புகார்

"எனது சொக்லேட்டைத் திருடிவிட்டார்" எனத் தாய் மீது சிறுவனொருவன் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்த சம்பவம் மத்தியப்பிரதேசம், புர்ஹான்பூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஹம்ஸா மூன்று வயதான சிறுவன், தனது தாயின் மீது அளித்துள்ள புகாரில், தன்னுடைய சொக்லேட்டை தாய் திருடி விட்டார் எனவும், அதனால் அவரைக் கைது செய்யும் படியும் தெரிவித்துள்ளான்.

இந்நிலையில் சிறுவனின் புகாரானது சமூகவலைதளங்களில் வைரலானதைத் தொடர்ந்து, அம் மாநில உள்துறை அமைச்சர் நரோத்தம் மிஸ்ரா, அச்சிறுவனுக்கு சொக்லேட் மற்றும் சைக்கிள் ஒன்றை வாங்கித் தருவதாக உறுதியளித்துள்ளார்.



## மல்லிகார்ஜுன கார்கேக்கு பிரதமர் மோடி வாழ்த்து

காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக மல்லிகார்ஜுன் கார்கே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காங்கிரஸின் தலைவர் பதவிக்கான தேர்தல் 17ஆம் திகதி நடத்தப்பட்டது. இத்தேர்தலில் மல்லிகார்ஜுன கார்கேவும் சசிதரூரும் போட்டியிட்டனர்.

இத்தேர்தலில் சுமார் 9 ,915 மாநில காங்கிரஸ் பிரதிநிதிகள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த நிலையில், அவர்களில் 9,500க்கும் மேற்பட்டோர் வாக்களித்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (19) மல்லிகார்ஜுன கார்கே 7,897 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டது.

அத்துடன் மற்றொரு வேட்பாளரான சசி தரூர் 1,072 வாக்குகள் பெற்றிருப்பதாகவும் 416 வாக்குகள் செல்லுபடியற்றவை என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில், 'காங்கிரஸ் தலைவராகப் புதிதாக பொறுப்பேற்கவுள்ள மல்லிஜார்ஜுன கார்கேவுக்கு இதயம் கனிந்த வாழ்த்துகள். அவரின் எதிர்காலம் இனிமையானதாக அமையட்டும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புதுடெல்லி

## பட்டாசு வெடித்தால் 6 மாதங்கள் சிறை

இந்தியாவின் தலைநகர் புதுடெல்லியில் ஒவ்வோர் ஆண்டும், காற்று மாசடைவதைக் கட்டுப்படுத்தும் விதமாக தீபாவளி அன்று பட்டாசு வெடிக்கத் தடை விதிக்கப்படுகின்றது,

அந்தவகையில் இவ்வருடமும் தீபாவளி பண்டிகையையொட்டி, பட்டாசு வாங்கினாலோ, வெடித்தாலோ 200 ரூபாய் அபராதத்துடன், 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்படும் என புதுடெல்லி அரசு தெரிவித்துள்ளது.



அத்துடன் பட்டாசு தயாரிப்போர், விற்பனை மற்றும் சேமித்து வைப்போருக்கு, 5,000 ரூபாய் அபராதத்துடன், 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

இந்நிலையில், புதுடெல்லியில் பட்டாசுத் தடையை செயற்படுத்த 408 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## ஹெலிகொப்டர்கள் தரையிறங்கலாம்

ஹெலிகொப்டர்கள் தரையிறங்குவதற்கு ஏற்ற வசதியுடன் புதிய தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுமென மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "விபத்துகள், இயற்கைப் பேரிடர்கள் போன்றவை நிகழும் போது, அவசரகால உதவிக்கு ஹெலிகொப்டர்கள் தரையிறங்கும் வகையில் அனைத்து புதிய தேசிய



நெடுஞ்சாலைகளிலும் 'ஹெலிபேட்' வசதி செய்யப்படும்" என்றார்.

அத்துடன் இது தொடர்பாக வீதிப் போக்குவரத்துத் துறை அமைச்சகத்துடன் ஆலோசித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.



## இருபதுக்கு 20 உலகக் கிண்ணம்:

# சுப்பர் 12 சுற்றில் இலங்கை

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 12 சுற்றுக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

ஜீலொங்கில் நேற்று நடைபெற்ற நெதர்லாந்துடனான குழு ஏ முதலாவது சுற்றுப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே சுப்பர் - 12 சுற்றுக்குத் தகுதி பெறுவதை இலங்கை உறுதிப்படுத்தியிருந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். காயமடைந்த துஷ்மந்த சமீர, பிரமோத் மதுஷனுக்குப் பதிலாக லஹிரு குமார, பினுர பெர்ணாண்டோ ஆகியோர் களமிறங்கியிருந்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஆரம்பத்திலேயே பதும் நிஸ்ஸங்கவை இழந்ததோடு, அடுத்த பந்திலேயே தனஞ்சய டி சில்வாவையும் இழந்தது. பின்னர் சரித் அஸலங்கவுடன் இணைந்து குசல் மென்டிஸ் இனிங்ஸை நகர்த்திய நிலையில் 31 (30) ஓட்டங்களுடன் அஸலங்க வீழ்ந்திருந்தார். தொடர்ந்து குறித்த இடைவெளியில் 19 (13) ஓட்டங்களோடு பானுக ராஜபக்ஷ வீழ்ந்ததோடு, சிறிதி நேரத்தில் ஷானகவும் வீழ்ந்திருந்தார். இறுதியில் 79 (44) ஓட்டங்களுடன் மென்டிஸ் ஆட்டமிழக்க 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களை இலங்கை பெற்றது.

பதிலுக்கு 163 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து சார்பாக ஆரம்பத் துடுப்பாட்டவீரர் மக்ஸ் ஓ டோட் மாத்திரமே ஒரு முனையில் நிலைத்து நின்று ஆட்டமிழக்காமல் 71 (53) ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஏனையோர் மகேஷ் தீக்‌ஷன (2), லஹிரு குமார, வனிடு ஹஸரங்க (3), பினுர பெர்ணாண்டோவிட விக்கெட்டுகளைப் பறிகொடுத்த நிலையில் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களையே பெற்று 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மென்டிஸ் தெரிவானார்.

இந்நிலையில், அடுத்து இடம்பெற்ற போட்டியில் நமீபியாவை ஐக்கிய அரபு அமீரகம் வென்றமையையடுத்து குறித்த குழுவிலிருந்து இரண்டாவது அணியாக சுப்பர் - 12 சுற்றுக்கு நெதர்லாந்து தகுதி பெற்றிருந்தது.

இப்போட்டியின் ஸ்கோர் விவரம் பின்வருமாறு,

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஐ.அ. அமீரகம்

ஐ.அ. அமீரகம்: 148/3 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: முஹமட் வஸீம் 50 (41), சி.பி. றிஸ்வான் ஆ.இ 43 (29), பஸில் ஹமீட் ஆ.இ 25 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ் 1/22 [4], டேவிட் விஸே 1/27 [4], பென் ஷிகொங்கோ 1/8 [1])

நமீபியா: 141/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: டேவிட் விஸே 55 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸஹூர் கான் 2/20 [4], பஸில் ஹமீட் 2/17 [3], முஹமட் வஸீம் 1/16 [2], ஆயன் கான் 0/7 [2])

போட்டியின் நாயகன்: முஹமட் வஸீம்

இதேவேளை, ஹோபார்ட்டில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அயர்லாந்தை மேற்கிந்தியத் தீவுகள் எதிர்கொள்ளவுள்ளதுடன், பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஸ்கொட்லாந்தை சிம்பாப்வே எதிர்கொள்ளவுள்ளது.



# உலகக் கிண்ண குழாமில் கிறீன்

அவுஸ்திரேலியாவின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணக் குழாமுக்கு கமரொன் கிறீன் அழைக்கப்பட்டுள்ளார். கையில் ஏற்பட்ட காயம் காரணமாக ஜொஷ் இங்கிலிஸ் தொடரிலிருந்து வெளியேறிய நிலையிலேயே குழாமுக்கு கிறீன் அழைக்கப்பட்டுள்ளார்.

அந்தவகையில், அவுஸ்திரேலியாவின் குழாமில் மத்தியூ வேட் மாத்திரமே விக்கெட் காப்பாளராகக் காணப்படுகின்றார். ஆக, போட்டியின்போது வேட் காயமடைந்தால் விக்கெட் காப்பாளருக்கு சிக்கலிருக்கும். முன்னதாக டெஸ்ட் போட்டியொன்றில் டேவிட் வோணர் விக்கெட் காப்பில் ஈடுபட்டதுடன், அவுஸ்திரேலியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான பிக் பாஷ் லீக்கில் ஆரோன் பின்ஞ்சும் விக்கெட் காப்பில் ஈடுபட்டிருந்தார்.

இதேவேளை, மிற்செல் ஸ்டார்க்கையும் தெரிவொன்றாக அவுஸ்திரேலியாவின் பயிற்றுவிப்பாளர் அன்றூ மக்டொனால்ட் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆரம்பமாகும் ஸஹிரியன் பிறீமியர் லீக்

எம்.என்.எம். அப்ராஸ்

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பான ஸஹிரியன் பழைய நண்பர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் மெற்றோபொலிடன் ஸஹிரியன் பிறீமியர் லீக்கின் இரண்டாவது பருவகால கிரிக்கெட் தொடரானது, கோலாகலமான முறையில் ஸாஹிரா கல்லூரி இன்று மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஸாஹிராக் கல்லூரி பாடசாலை பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து 29 அணிகள் பங்கு கொள்ளும் ஏழு ஓவர்கள் கொண்ட குறித்த தொடரானது, எதிர்வரும் திங்கள்கிழமை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியுடன் முடிவடையவுள்ளது.

சம்பியனாகும் அணிக்கு 25,000 ரூபாய் பணப் பரிசும் சம்பியன் கிண்ணமும், இரண்டாமிடத்தைப் பெறும் அணிக்கு 15,000 ரூபாய் பணப்பரிசும் கிண்ணமும் வழங்கப்படவுள்ளன.

## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் செல்சி பிறென்ஃபோர்ட் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிறென்ஃபோர்ட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியிருந்தது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது. யுனைட்டெட் சார்பாக, பிரெட், புரூனோ பெர்ணாண்டஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற எவெர்ற்றனுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் நியூகாசில் யுனைட்டெட் வென்றிருந்தது.

உக்ரேன்

# இருளில் மூழ்கிய உக்ரேன்

உக்ரேனில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள் மீது ரஷ்யா அண்மைக்காலமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் இத்தாக்குதல்களால் ஏற்பட்ட மின்தடையால் உக்ரேனின் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

இதுகுறித்து உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறும்போது, "உக்ரேனின் 40 சதவீத மின் நிலையங்கள் ரஷ்யாவால் அழிக்கப்பட்டுவிட்டன. இதனால் நாடு முழுவதும் பெரும் மின்தடை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மின் உற்பத்தி பணியைச் சரிசெய்ய முயற்சி நடந்து வருகிறது.

எனவே மக்கள் அத்தியாவசியமில்லாத மின்சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். அத்துடன் அதிகமாக மின்சக்தியை நுகரும் சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். பொதுமக்கள் மின்நுகர்வை கவனமாக பயன்படுத்தினால் அடுத்து வரும்



நாள்களில் மின்தடை நேரம் படிப்படியாக குறைக்கப்படும்" என்றார்.

அமெரிக்கா

# கால் வலி எனச் சென்ற பெண்ணுக்கு குழந்தை பிறந்தது

அமெரிக்காவில் ஓமாஹா நகரில், பேய்ட்டன் ஸ்டோர் என்பவர் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

23 வயதான இவர் நீண்ட நாள்களாக கால் வலியால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் வைத்தியசாலைக்குச் சென்று பரிசோதித்த அவருக்கு, அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி காத்திருந்துள்ளது. அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் கர்ப்பமாக இருப்பதாகவும் அவருக்கு கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், உயர் இரத்த அழுத்தமும் காணப்படுவதாகவும் இதனால் அவரது உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும் எனவே குழந்தையை உடனடியாக வெளியே எடுக்க வேண்டும் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து 10 வாரங்களுக்கு முன்னரே அவசர கால சிசேரியன் அறுவை சிகிச்சை செய்து 1.800 கிராம் எடையுள்ள ஆண்குழந்தையை மருத்துவர்கள் பிரசவித்துள்ளனர். இந்நிலையில் பேய்ட்டனின் பிறந்தநாள் அன்றே, அக் குழந்தையும் பிறந்துள்ளதால் அவரின் குடும்பத்தினர் இரட்டை மகிழ்ச்சியில் உள்ளனர்.

பிரித்தானியா


# வீழ்ச்சியை சந்திக்கும் பிரித்தானியா

## உள்துறை அமைச்சரும் பதவி விலகினார்

பிரித்தானியாவின் புதிய பிரதமராக லிஸ்டர்ஸ் பதவி வகித்து வருகின்றார். இவர் கடந்த மாதம் வரிக் குறைப்புகளை ஆதரிக்கும் விதமாக சில திட்டங்களை வெளியிட்டார்.

குறிப்பாக கடந்த மாதம் கொண்டு வந்த சர்ச்சைக்குரிய மினி வரவு செலவு திட்டத்தில், நிறுவனங்களுக்கான வரி உயர்வு மற்றும் அதிக வருவாய் உள்ளவர்களுக்கு 45 சதவிகித வரி உயர்வு போன்றவற்றை ரத்து செய்வதாகத் தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக பிரித்தானியாவின் பொருளாதாரம் நிலை குலைந்து போனது. குறிப்பாக டொலருக்கு நிகரான பவுண்ஸின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சியை சந்தித்துள்ளது.




இதற்கிடையே பிரதமரின் இந்தத் திட்டத்திற்கு சொந்த கட்சியைச் சேர்ந்த எம்பிக்களே அதிருப்தி தெரிவித்திருந்தனர்.

அந்தவகையில் இந்திய வம்சாவளியை சேர்ந்த உள்துறை அமைச்சர் சுயெல்லா பிரேவர்மேன் பதவி ஏற்று 43 நாள்களே ஆன நிலையில், தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இவரது தந்தை கோவாவை சேர்ந்தவர் என்பதும் தாயார் தமிழகத்தை சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.







பிரித்தானியா

# ஏலத்தில் சார்லஸ் டயானாவின் திருமணக் கேக்

40 ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய மன்னர் சார்லஸ் - டயானாவின் திருமணத்தின்போது பரிமாறப்பட்ட கேக் துண்டு ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

1981ஆம் ஆண்டு மிகவும் பிரமாண்டமாக நடைபெற்ற இத்திருமணத்தில் 3,000 விருந்தினர்கள் பங்கேற்று இருந்தனர்.

இந்நிலையில் இத்திருமணத்தில் கலந்து கொண்ட நிகெல் ரிக்கெட்ஸ் என்பவர் தனக்குப் பரிமாறப்பட்ட திருமண கேக்கை, 41 ஆண்டுகளாகப் பதப்படுத்தி வைத்திருந்துள்ளார்.

எனினும் கடந்தாண்டு அவர் உயிரிழந்த நிலையில், தற்போது குறித்த கேக் ஏலத்தில் விற்கப்படவுள்ளது.

இதற்கு முன் 2014ஆம் ஆண்டு, அதே திருமணத்தில் பரிமாறப்பட்ட கேக் துண்டொன்று ஏலத்தில் விற்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



பிரித்தானியா

# வில்லியம், ஹரிக்கு ஒரு சகோதரி உள்ளார்

பிரித்தானியாவின் மன்னர் சார்ள்ஸின் 2 ஆவது மனைவியான கமீலா, ஏற்கெனவே ஆண்ட்ரூ என்பவரை திருமணம் செய்திருந்தார்.

கமீலா - ஆண்ட்ரூ தம்பதியினருக்கு டாம் மற்றும் லாரா என்ற இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

1995ஆம் ஆண்டு ஆண்ட்ரூவைத் திருமணம் செய்துகொண்ட கமிலா, இளவரசர் சார்ள்ஸைத் திருமணம் செய்து கொண்டார்.

கமீலா, சார்ள்ஸை திருமணம் செய்து கொண்டதால், அவரது பிள்ளைகள் இளவரசர்கள் வில்லியம் மற்றும் ஹரிக்கு சகோதரர்களாகின்றனர்.

அந்தவகையில் கமீலாவுக்கும் ஆண்ட்ருவுக்கும் பிறந்த டாம், எழுத்தாளர் மற்றும் உணவு விமர்சகரான உள்ளார் எனவும், மகள் லாரா ஆங்கில கலைத்துறை தொடர்பிலான பணியில் இருந்து வருகிறார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிகழ்ச்சிகளைப் பொதுவாகத் தவிர்க்கும் லாரா இளம் வயதில் தான் சந்தித்த அனுபவங்கள் காரணமாக தன் மீது ஊடகப் பார்வை விழுவதை தவிர்க்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் லாரா, தனது தாயின் கணவரும் அவரது பிள்ளைகளும் தனது இதயத்தை கவர்ந்து விட்டனர் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியா

# இடிந்து விழுந்த பிரமாண்ட பள்ளிவாசல்

இந்தோனேசியாவின் தலைநகரா ஜகார்த்தாவில் உள்ள பள்ளிவாசலொன்றின் பிரமாண்ட குவிமாடத்தில் நேற்று முன்தினம் (19) பிற்பகல் 3 மணியளவில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்றுள்ளன.

இதன் போது எதிர்பாராத விதமாகத் தீ பரவியதால் குறித்த குவிமாடம் இடிந்து விழுந்துள்ளது. இத்தீவிபத்தினையடுத்து ஏற்பட்ட இடிபாடுகளில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இவ்விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் சுமார் 5 மணிநேரம் போராடி தீயணைப்பு வீரர்கள் இத் தீயினை அணைத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு குறித்த குவிமாடத்தை புதுப்பித்த போதும் இதேபோல் தீப்பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 21 ஒக்டோபர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.